

# மண்ணில் தெரிகிற மதுரநிலா





மங்களம் குடும்ப வார இதழில்
யாகவா முனிவனிவரை பற்றி
வலம்புரிஜான் எழுதிய தொகுப்பு

# அன்று ஆடு மேய்த்தவர் இன்று அற்புதம் செய்கிறார்.

மேடவாக்கத்தில் ஒரு அற்புத முனிவரை உங்களுக்குக் காட்டப் போகிறேன். என்னுடன் வாருங்கள்"

வசனகர்த்தாவும் இயக்குனருமான வியட்நாம் வீடு சுந்தரம் என்னை அழைத்தார். அவரது அன்புக்குக் கட்டுப்பட்டு நானும் அவருடன் காரில் ஏறிக்கொண்டேன். சுந்தரராஜன் என் பவரும் உடன் வந்தார். 'யார் அந்த அற்புத முனிவர்' என்கிற கேள்விக்குறி என்னுள் எழ சுந்தரத்தைக் கேட்டேன்... "நான் சொல்வதைவிட நீங்களே நேரில் பார்த்துத் தெரிந்து கொள்வது நல்லது" என்றவர் முன்னுரை மாதிரி அவரைப் பற்றிய விவரங்களை உணர்ச்சி வேகமாக சொல்ல ஆரம்பித்தார். யாகவா முனிவர் அவர், முனிவர் என்றதும் ஏதோ நிஷ்டையில் அமர்த்திருப்பார் என எண்ண வேண்டாம்.

நம்மைப் போலவே வேட்டி, சட்டை, அணிந்திருப்பார். மனைவி, இரண்டு குழந்தைகள் உண்டு, வீபூதி, பூஜை, புஷ்பங்கள், முகத்தில் தாடி எதுவுமே அவரிடம் கிடையாது. பறவைகளோடு பேசத் தெரியும் அவருக்கு. கூடுவிட்டுக் கூடுபாயும் சக்தியும் உள்ளது. தன்னை நாடி வரும் பிரசினைக்குரியவர்களுக்கு தண்ணீர் கொடுப்பார். பிரசினைகள், நோய்கள் எதுவாக இருந்தாலும் குணமாகிவிடும். ஏராளமான பேர்கள் அங்கு வந்து அந்த முனிவரின் ஆசியோடு சிரித்த முகத்துடன் திரும் பியிருக்கிறார்கள். சல்லிக்காசு கூட இவர் யாரிடமும் வாங்குவதில்லை. இன்று ஞாயிற்றுக்கிழமை, நிறையப்பேர் அவரை" தரிசிக்க வருவார்கள். நீங்கள் அவர்களையே கேட்டு தெரிந்து கொள்ளுங்கள்' என்றார். எனக்கு வியப்பு ஒருபக்கம்; வினா மறுபக்கம்.

- **தீராத நோய் தீர்க்கும் யாகவா முனிவர் !**
- **விஞ்ஞானம் வளர்ந்த காலத்தில் வியக்கவைக்கும் அற்புதங்கள் !**
- **பிரிந்தவர்கள் சேருகிறார்கள் !**
- **பெருகுகிறது வியாபாரம் !**

காரைவிட்டு நாங்கள் இறங்கியபொழுது அங்கே பெரிய கூட்டம். பலர் முனிவரின் பாதங்களைத் தொட்டு வணங்கியபடியே இருந்தனர். ஆம். சுந்தரம் சொன்ன மாதிரியே அவர் தோற்றத்தில் சாதாரண மனிதரைப் போல காட்சியளித்தார். என்றாலும் அவரது நெற்றியில் ஓடிய தீர்க்க ரேகைகள் அவரை அசாதாரணப் பிறவி என்பதை உணர்த்திற்று. அவரது பேச்சு மாயப்பிறவி என் பதைப் புரிய வைத்தது. தன்னை வணங்க வந்தவர்களிடம், "என்னை வணங்காதே, உனது தாய், தந்தையரை வணங்கு. உன்னையே நீ உணர்ந்துகொள். உன்னிடம் உள்ள ஆத்மாவை வணங்கு" என்று சொல்லிக் கொண்டிருந்தார்.

சுந்தரம் என்னை அறிமுகப்படுத்தியதும் "பத்திரிகைக்காரரா ! என்னைப்பற்றி எழுதுவதாக இருந்தால் உண்மைகளை எழுதுங்கள்.. என்னைத்தேடி வந்தர்கள் எதைச் சொல்கிறார்களோ அதை எழுதுங்கள்.." என்றார். அவர் சொல்லி முடிப்பதற்குள் பலர் பல அற்புதங்களைச் சொல்ல என்னை நாடி வந்தார்கள்.

அமிஞ்சிக்கரையிலிருந்து வந்த ஜே.பி.சின்னத்துரை சொன்னார். "எனக்கு ரத்தவாந்தி, ரத்த பேதி! நான் பார்க்காத டாக்டர் போகாத கோயில் இல்லை. மாந்த்ரீகம் இல்லை. என் உடம் பெல்லாம் பாளம்பாளமாக வெடித்துப் போயிற்று.. என் உறவினர்களெல்லாம் என்னை உதாசீனப்படுத்திப் பேச ஆரம்பித்தார்கள். கடைசியாக பிரபல நர்சிங் ஹோமில் அட்மிட் ஆகி ஆபரேஷனுக்கு தேதி குறித்து விட்டார்கள். 65 ஆயிரம் ரூபாய் செலவாகும் என்று சொன்னதும் என்ன செய்வதென்று திகைத்துப் போன சமயத்தில் யாகவா முனிவரைப் பற்றிக் கேள்விப்பட்டேன். ஐயா குடிக்க தண்ணீர் கொடுத்தார்கள். அன்று முதல் இன்று வரை சுகமாக இருக்கிறேன். நான் இதற்காக நயாபைசா கூட செலவு செய்யவில்லை.

அப்போதிருந்து வாராவாரம் தவறாமல் வந்து, ஐயாவை தரிசித்து விட்டுப் போகிறேன்." ரவிசங்கர் என்னும் சிறுவனை அழைத்துக் கொண்டு இந்திரா நகரிலிருந்து வந்த ரத்னசாமி "என் மகனுக்கு டைபாய்டு ஜுரம். 64 பாட்டில் "குளுகோஸ் தண்ணீர் ஏற்றிய பிறகும் குணமாகவில்லை. நுங்கம்பாக்கம் நர்சிங் ஹோமிலிருந்து இங்கு அழைத்துவந்தேன். தண்ணீர் கொடுத்தார். குணமாகிவிட்டது" என்கிறார். தென்மேற்கு போக் ரோடு 58ம் எண் இல்லத்திலிருந்து வந்த அருண்குமாருக்கு வலிப்பு நோயாம். தற்போது பூர்ணகுணம் என்றார்.

மருமகளை, ஒரு பெரிய ஆஸ்பத்திரியில் உயிருக்கு ஊசலாட அனுமதித்துவிட்டு டி.எஸ்.ஆர்.எம். புலபாடும் செட்டியார் யாகவா முனிவரிடம் வந்து சொன்னதும், ”உன் மருமகளுக்கு ஒன்றும் நேராது. போய்வா” என்று அருளாசி கூறி அனுப்பிவைத்தார். அங்கே போய் பார்த்தால் மருமகள் எழுந்து உட்கார்ந்திருக்கிறாள்.'' "ஒரு குழந்தையை பேச்சு மூச்சற்ற நிலையில் உயிர்போகும் தருவாயில் கொண்டு வந்தார்கள்... யாகவா குழந்தையை வாங்கி அதன் மூக்கில் மூன்று முறை ஊதினார். குழந்தை பிழைத்துக் கொண்டது” இப்படிச் சொன்னவர் 'யுவயாகவா' ஆர்.தனபால்.

ஜாம்பஜார் வாசு, அனுராதா என்னும் மேகலா, அபூர்வ சிகாமணி, கலையரசி இப்படிப்பலர் யாகவாவின் அற்புதங்களை விவரித்தார்கள்... மடிப்பாக்கம், பிரதான (81ம் எண்) சாலையிலிருந்து வந்த லட்சுமணசிங் மட்டும் ”எனக்கு இங்கே ஆத்மதிருப்திக்காக வருகிறேன். அது எனக்குக் கிடைத்துள்ளது” என்று கூறினார். ”சொந்தத் தொழில் ஆரம்பித்திருக்கிறேன். வியாபாரம் செழிக்க வேண்டும்” என்று கோலபவ்யமாக நின்றவரிடம் "போய் வா! நான் கவனித்துக் கொள்கிறேன். ஆனால் வியாபாரத்தில் நேர்மையாக நடந்து கொள்” என்கிறார் யாகவா. 'என் கணவர் என்னை விட்டுக் கோபித்துக்கொண்டு போய் எட்டு மாதமாகிறது. குழந்தையையும் எடுத்துப் போய்விட்டார் என்கிறாள் அமுதா.” ”உன் எண்ணம் நிறைவேறும்... ஐந்து நிமிடம் அங்கே அமர்ந்துவிட்டுப் போ... அடுத்த வாரமும் வா' என்கிறார் யாகவா.

சுமார் நூற்றுக் கணக்கானவர்களுக்கு அருளாசி வழங்கிய பிறகு என்னைப் பார்க்கிறார். "நான் படிக்காதவன். சொந்த ஊர் அம்மன்புரம். திரு நெல்வேலி மாவட்டம். சிறுவயதில் ஆடு மாடு மேய்த்துக்கொண்டிருந்த நான் அப்போதே பறவைகளோடு பழகுவேன். ஒரு கையில் பறவையையும் மற்றொரு கையில் பாம்பையும் பிடித்துக்கொண்டு நிற்பதைப் பலர் பார்த்திருக்கிறார்கள். நான் யாகவா முனிவர் அவதாரம் என்பதை மாயைதான் எனக்கு உணர்த்திற்று' என்றவர் தமிழில் பல குறள்களை, பாக்களை மேற்கோள் காட்டிப் பேசியது எனக்கு மேலும் வியப்பளித்தது. நல்லதையே சொல்கிறார். நல்லதையே செய்கிறார். பொன் மொழிகளைச் சொல்லி மக்களை நல்வழிப்படுத்தும் அம்மாமுனிவரைப் பற்றி எழுதுவதில் பெருமைப்படுகிறேன்.. அது நான் செய்தபாக்கியம்.. – திரைஞானி விலாசம் யாகவா முனிவர் 2/289, வேளச்சேரி மெயின் ரோடு, மேடவாக்கம், சென்னை.

# மண்ணில் தெரிகிற மதுரநிலா

## 1–வது வாரம்

வானப்பறவைகள் வந்து வணங்குகின்றன; வழிநெடுக மக்கள் வணங்குகின்றனர். இதிகாசங்களில் மாத்திரமே இதுவரை நாம் கேள்விப்பட்ட இமாலய முனிவர் ஒருவர் பற்றி இப்போது நாடு முழுவதும் பேசப்படுகிறது. அவர்தான் யாகவா முனிவர்.

அருளாளர்கள் பலரைப்பற்றி அவ்வப்போது நான் அறிந்ததும் உண்டு; அறிவித்ததும் உண்டு. உண்மையை உணருகிற எனது முயற்சி எப்போதும் தொடர்ந்து கொண்டே இருக்கிறது.

சூரியச் சூடு எல்லா உயிர்களிலும் சுடர்விளக்காக எரிகிறது என்பதுபோல, ஆன்ம ஞான அருள் வெள்ளம் எல்லா உயிர்களிலும் இழையோடுவதை எனக்கு அறிய முடிகிறது. ஆகவே கடந்த காலத்தில் எனக்கு அறிமுகமான ஞானியர், தவசியர், அருளாளர் எவரும் குறைந்தவர்களே அல்லர். உயர்ந்த அவதாரிகளின் எண்ணிக்கைக்கு உச்ச வரம்பு விதிக்க இயலாது; கூடாது.

ஞானக் கடலில் மூழ்கிய எனக்கு காலக்கிழிஞ்சல்களும், கற்பனை முத்துக்களுமே இதுவரை கிடைத்தன. எப்போதோ ஒரு முறை பவளப் பாறைகளைப் பார்த்து நான் பரவசப்பட்டதும் உண்டு. இப்போது கடலுக்குள் ஒரு சலவைக்கல் மண்டபமே தெரிகிறது.

கொடுத்து வைத்தவர்கள் மாத்திரமே கூடுகிற கோயில் ஒன்றிற்கு நான் சென்று வந்ததைப் பற்றி இப்போது குறிப்பிடப் போகிறேன். ஆற்றுப்படுத்தும் சங்க காலத்துப் பாணன் போல கொடுத்துவைத்த ஆன்மாக்களைக் கொண்டு சேர்க்க வேண்டும் என்கிற விருப்பம் காரணமாகவே இவற்றை எழுதுகிறேன். வியட்நாம் வீடு சுந்தரம், திரை, ஞானி, சுந்தரராஜன் போன்ற நண்பர்களால் அருளாளர் யாகவா முனிவரை இரண்டு முறைகள் நானும் எனது துணைமயிலும் கண்கொண்ட மட்டும் அள்ளிக் கொண்டோம். விளக்கம் பெறுவதற்கு வினாக்கள் தொடுக்கலாம் என்று தொடங்கி வைத்தது வியட்நாம் வீடு. தவத்திற்குப் போன இடத்தில் தாக்கிப்பதா என்று தயங்கினேன். விடைகள் இல்லாமல் கேள்விகள் இல்லை. ஆகவே ஒப்புக்காக ஒன்றிரண்டு கேள்விகளைக் கேட்டேன். தெளிவு பெறுவது அல்ல எனது நோக்கம்; தேறுதல் பெறுவதே எனது ஆவல்.

சூரியனே! உனக்குச் சூடு எங்கிருந்து வந்தது என்று கேட்டால்... பறவையே உனது அலகின் நேர்த்தி எப்படி அமைந்தது என்று கேட்டால்... பூவே உனது புல்லி வட்டத்தை இப்படி புள்ளிமாறாமல் போட்டது யார் என்று கேட்டால்....

எனது கேள்விகளுக்கெல்லாம் பதில்கள் கிளர்ந்து வந்தன. அருளாளர் யாகவா முனிவரை அறிந்து கொள்வது கடினம்; உணர்ந்து கொள்வது எளிது. இந்த ஞானக் கடலின் அலைவரிசைகளில் அன்புப் படகுகள் ஆயிரமாய் நீந்துகின்றன. தத்துவிகள் உலகிற்கு வந்தார்கள். தத்துவங்கள் விளக்கம் பெற்றன. பசித்தவனுக்கு, பயம் பிடித்தவனுக்கு, நோயின் பிடியில் நொந்து போகிறவனுக்கு என்ன கிடைத்தது ?

- **கொடுத்து வைத்தவர்கள் மாத்திரமே கூடுகிற கோயில்**
- **ஒடுங்காத நோய்கள் ஒடுங்குகின்றன !**
- **ஒன்றுமில்லாத திரைப்படங்கள் ஓகோ' என்று ஓடுகின்றன !**
- **அட்ட தரித்திரர்கள் ஆனந்த பூபதிகள் ஆகிறார்கள் !**

கண்ணீரில் கரைகிற மனித இனத்திற்குத் தத்துவ விளக்கமா உடனடித் தேவை? அன்பு, ஆறுதல், அகமகிழ்ச்சி. இவற்றைத் தருகிறவர் யாகவா முனிவர். தத்துவச் சிந்தனைகளைத் தவநிலையில் பெற்றுள்ள யாகவா முனிவர், நோய் தீர்க்கிறார்; வறுமைச் சங்கிலிகளால் வதைபடும் ஏழைகளின் வாட்டம் போக்குகிறார். நம்மை நமக்குக் காட்டுகிறார்; ஆன்மநேயத்திற்கு அறை கூவல் விடுக்கிறார்.

நடந்து போக கால்கள்; நதியைக்கடக்க ? அப்படியே ஒவ்வொரு காலத்திலும் இறைவன் மக்களுக்கு அவசியமான மார்க்கதரிசிகளை அனுப்பிவைக்கிறான். கல்லுக்குள் இருக்கும் தேரைக்கும் கருணை செய்கிற கர்த்தரே யாகவா முனிவரை இந்த நாள் மக்களுக்கு உள்ளச் சுகமும், உடல் நலமும் தர அனுப்பி வைத்திருக்கிறார். யாகவா முனிவரைப் பார்த்தால் படித்தவர்கள் ஏமாந்து விடுவார்கள். படித்தவர்கள் என்பவர்கள் புத்தகம் வாசித்தவர்கள். வாழ்க்கையை வாசித்தவர்கள் அல்லர். ஆகவே படிப்பில்லாத ஒரு பாமரஞானியின் பக்குவம் இவர்களுக்குப் பிடிபடாமலே போகும். இதெல்லாம் ஒரு கிருஷ்ண விளையாட்டு.

உள்ளங்கையில் நாவல் பழத்தைத்தான் கொள்ளலாம்; நான்கு புறமும் சூழ்ந்த கடலை. அள்ள இயலுமா? யாகவா முனிவர் ஒரு ஞானசாகரம். உதவி இல்லாமல் ஒட்டகத்தின் மீது உட்காருவது அவ்வளவு எளிதல்ல. பச்சைக்களிமண் பாத்திரமாக நாம் இருந்தால் இந்த ஞானவெள்ளத்தின் துளியைக் கூட நாம் கொண்டு வர இயலாது. நாம் சுட்ட மண் சட்டிகளாகவாவது இருக்க வேண்டும். ஒடுங்காத நோய்கள் ஒடுங்கிவிடுகின்றன; ஒன்றுமில்லாத திரைப்படங்கள் "ஓகோ" என்று ஓடிவிடுகின்றன; அட்ட தரித்திரர்கள் ஆனந்த பூபதிகளாகி விடுகிறார்கள். கேட்டது கிடைக்கிறது.

அழைத்தால் நீங்கள் வந்துவிட இயலுமா? யாகவா அருள் இருந்தால் என்றேனும் அவரை அடைவீர்கள். நான் இரவில் கூவுகிற இனிய சேவல். கும்மிருட்டில் நான் கூவுகிறேன்; நீங்கள் காலக்கடிகாரத் தின் கைகாட்டி முட்களைப் பார்த்து விட்டு விடிவதற்கு முன்னே நீ கூவுவது வீண்வேலை என்கிறீர்கள்.

படிக்காமல் பட்டம் பெறாமல், தாடி, முடி வளர்க்காமல், சாயவேட்டி உடுத்தாமல், சதிராடும் உத்திராட்சம் இல்லாமல் சந்தனப் பொட்டுக் கூட தரிக்காமல் ஒரு முனிவர் என்றால் செக்கு மாடுகளாகச் சிதைந்துபோன நமக்கு அதிர்ச்சி தான் வரும். யாகவா முனிவரின் கிருஷ்ண விளையாட்டு இது; ஏமாந்துவிடக் கூடாது. நம்மிடத்திலிருக்கிற அளவுகோல்களை வைத்துக் கொண்டு யாகவா முனிவரை அளந்து பார்ப்பது தவறு. வெட்டி எறிந்த நகங்களை வைத்துக் கொண்டு வெள்ளி நிலாவை அளப்பது எப்படி ?

இருட்டில் நிற்பவர்களுக்கு யாகவா முனிவர் வெளிச்சத்தின் விலாசம். திருஞான சம்பந்தனின் பாடலில் திளைத்த திருநெல்வேலிச் சீமையில் அம்மன்புரத்தில் பிறவிப் பிணி அறுக்கும் இந்தப் பேராளர் பிறந்தார். இலட்சுமண நாடார், இசக்கி அம்மை என்ற பெற்றோரின் இரட்டைக் குழந்தைகளில் இவர் இளையவர். இயற்பெயர் இலட்சுமணர். கூட்டுப் பறவைகளோடு குதூகலமாக வாழ்ந்த ஞானக்குபேரர். காண்ட மண்டல முனிவர்களின் அருளாசி பெற்ற ககன ஞானி என்றாலும் நாற்பது வயது வரை, உலகின் போக்கில், துன்பத்தீயில் இவரும் துடித்தவர்தான். என்றாலும் எப்போதும் ஏழைகளிடத்தில் அன்பு பாராட்டும் ஏந்தல் இவர். அட்டமாசித்திகள் கைவரப்பெற்ற அருந்தவச்சீலர் இவர். சாதி, சமயச் சடங்குகளைச் சுட்டுப் பொசுக்க வந்த சுடரொளி.

அரக்கன், அசுரன், தடாயன் இவர்களை அழித்து காண்ட மண்டலங்களில் சிறைவைக்கப் பட்டிருந்த முனிவர்களை விடுவித்த இம்மாபெரும் முனிவர், 1986 முதல் பில்லி சூன்யம், பேய் பிசாசு, மாந்திகம் இவைகளுக்கு உலகத்தில் சக்தி இல்லை என்று அறிவிக்கிறார். உருது போன்று தோன்றுகிற இனிய மொழியில் இவர் எழுதுகிறார். இம்மொழி 5,000 ஆண்டுகளுக்கு முன்னர் உலகில் வழங்கி வந்ததாம். இதை அறிந்து கொள்ளுகிற ஒரு ஞானி விரைவில் வெளிப்படுவார் என்கிறார்.

யாகவா முனிவரின் சமாதி நிலைக்குப் பிறகு தத்துவதரிசியாக அவரது ஞானமார்க்கத்தைத் தொடர கள்ளமில்லாத வெள்ளைச் சிரிப்பும், கடும் ஞான ஒடுக்கமும் இழையோடும் பலரும் இங்கு வருவர். கூட்டம் கூடவேண்டும்; தான் கொண்டாடப் படவேண்டும் என்கிற நோக்கம் துளி கூட யாகவா முனிவருக்கு இல்லை. கொடுத்து வைத்தவர்கள் பிடித்துக் கொள்ளுவார்கள். இதில் நான் எழுதி நடப்பது எதுவும் இல்லை. எதற்கும் என்றேனும் ஒருநாள் 2/289 வேளச்சேரி நெடுஞ்சாலை, மேடவாக்கம் சென்று வாருங்கள். (தொடரும்.)

## 2—வது வாரம்

எப்போதோ பார்த்த மாதிரி ஒரு முகம். எங்கே பார்த்தோம் என்று எளிதாக கண்டுகொள்ள முடிவதில்லை. முந்திய பிறப்பில் சந்தித்திருப்போமோ என்னவோ ?

இந்த அருளாளர் அவதரித்த நெல்லை மாவட்டம்தான் எனக்கும். ஒரு வேளை இப்படிப்பட்ட முகபாவத்தைச் சின்னதிலேயே பார்த்த மனம், சித்திரமாக அதை வடித்து வைத்திருக்கிறதோ ? சின்ன வயதிலிருந்து சென்னையிலேயே தங்கிவிட்ட எனது மனையாளும் அவ்வாறே மனங்கசிந்து ”எங்கேயோ பார்த்தது போல இருக்கிறதே’ என்றே சொல்லிக் கொண்டிருந்தாள். இது என்ன மன விகாரமோ எனக்கொன்றும் பிடிபடவில்லை. கனவுப் பறவைகளுக்கு கால்கள் முளைத்த மாதிரி இருக்கிறது. பார்த்ததும் பதிந்து விடுகிற பளிங்கு முகம். ஈர மண்ணில் எளிதாக நுழைந்து விடுகிற விதை மாதிரி, நிழற்படத்தில் உருவம் கணப்பொழுதில் நிலைத்துவிடுகிற மாதிரி, என் மனதில் யாகவர் உருவம் பதிந்துவிட்டது.

என் ஆன்மாவில் அவரது உருவம் அச்சடிக்கப்பட்டிருந்தால் ஒழிய இப்படி அந்த காந்த உருவம் கண்ணுக்குள் கருக் கொள்ள வழியில்லை. கடந்த காலத்தைக் கௌரவப் படுத்துவதற்கே நாம் கற்றிருக்கிறோம். கடந்தது, நிகழ்வது, நடக்கப் போவது – இப்படி காலத்தை நமது வசதிக்காக நாம் கற்பனைப் பாத்திகளால் பிரித்துப் பார்க்கிறோம்.

நமது கடிகாரம் காலத்தைப் பிரிக்கிறது. இரவும், பகலும் காலத்தைப் பிளக்கிறது. மற்றப்படி காலம் காற்றல்லவா ? அதற்கு ஏது பிரிவு ? அதற்குள் ஏது பிளவு ?

கடந்த காலத்தைக் கனப்படுத்துகிற நாம், நிகழ்காலத்தை அலட்சியப்படுத்தி விடுகிறோம். கௌதமபுத்தனும், மஹாவீரரும் அவரவர் காலத்தில் கொண்டாடப்படவில்லை. கடந்த காலத்தில் வேரடித்து நிற்கிற இந்த ஞான வேதியர்கள் நிகழ்காலத்தின் பிரமிப்பு வெளிச்சத்தில் பிரகாசிக்கிறார்கள்.

யாகவ முனிவர் வாழும் காலத்தில் நாமும் வாழுகிறோம். ஆனால் கடந்த கால ஞானிகளைப் போற்றுவதே கடமை என்று கருதிக் கொண்டிருக்கிறோம். நாம் தொட்டும், உணர்ந்தும், தொடர்ந்தும் வருகிற யாகவ முனிவர் காலங்களுக்கு அப்பாற்பட்டவர். நிகழ் கால அலட்சியம் நம்மை நிர்மூலமாக்கி விடாமல் யாகவர்தாம் நம்மைக் காப்பாற்ற வேண்டும். அறுநூறு ஆண்டுகளுக்கு முன்னர் நடந்ததற்காகவோ, ஆறாயிரம் கல் தொலைவிற்கு அப்பால் நடந்ததற்காகவோ அற்புதங்களைக் கொண்டாடுகிற மாயையிலிருந்து நான் எப்போதோ வெளியேறி விட்டேன் ஒரு மாயையின் சங்கிலி அறுந்தால், மறு மாயை தனது சிறைகளில் நம்மை அடைக்கும். எது மாயை எது உண்மை இதை அறிவதற்கும் யாகவரே அருள்பாலிக்க வேண்டும்.

திருநெல்லைத் தமிழ் – அதிலும் எங்கள் திருச்செந்தார் உப்புத் தமிழ் – உரோமம், தோல், சதை, இரத்தம் கடந்து எறும்பாக இருக்கிற எளிமை / பச்சையான கொச்சைத் தமிழ் – இதுதான் எனக்குப்பிடித்தது. முகப் பூச்சுக்களையே பார்த்து வியர்த்துவிட்ட எனக்கு முகம் தெரிகிற முதல் முறை இது. மொழி, நிர்வாணத்திற்கு விரைவாக முந்துவதை யாகவரது பேச்சிலே பார்க்கிறேன். போலிகள் சபைகளில் ஆசாரம் என்ற போர்வைக்குள் பதுங்குகிறபோது ஒதுங்கிற சொற்களே கூட இந்தப் புண்ணியனின் நாவில் புரளுகின்றன.

யாகவர் மண்ணிலிருந்து, மண்ணுக்குள்ளிருந்து, அதன் ஈர விஸ்வத்திலிருந்து வானம் வரைக்கும் வளர்ந்து நிற்கிறார்.

புற்று நோயாம் சாத்தான் குளம், எங்கெங்கேயோ போயிருக்கான், இங்கே வந்ததும் சுகமாப் போச்சிதாம். வந்திருந்தான். எனக்கென்ன தெரியும் ? நாம பெருமப்படக் கூடாதில்லை ! – குழந்தையாய் யாகவர் குதூகலிக்கிறார். மனம் கரைந்து போகிறது. "அம்மையே, அப்பா, ஒப்பிலாமணியே, அன்பினின்றெழுந்த ஆரமுதே!" என்று நெஞ்சம் நிலைகுலைந்து கண்ணீரில் நனைகிறது.

- **பார்த்ததும் பதிந்து விடுகிற பளிங்கு முகம் !**

எனக்குச் சாதியெல்லாம் கிடையாது. வரமுடியாது. விடமாட்டேன். நமக்கு ஏதுவே சாதி. நமக்கு எல்லாரும் ஒண்ணுதானே' என்கிறார். – சாதி என்கிற விஷ விருட்சத்தின் சிம்புவேர் கூட அவரது ஆஸ்ரமத்தில் துளிர்விட இயலவில்லை. இதைவிட தென்னை இலைபோல கிழிந்து போன இந்த சமுதாயத்தில் சமத்துவத்திற்கு வெற்றி கிடைக்குமா ? அவரை வந்து தரிசிக்கிறவர்கள் அநேகரின் சாதி, சமயம் அவருக்குத் தெரியாது. ஏன் அவ்வளவு தூரம் ? சந்திக்கிறவர்கள் ஒருவரையும் அவர் சரிவர அறியமாட்டார். இது எவ்வளவு மேன்மை ? அவரது சமூகத்தில் உட்கார்ந்தால், அவருக்குத் தெரிந்து விடுகிறது. வந்தவர், அவர் வரலாறு, முற்பிறவிகள், இப்பிறவி, தாழ்வு, உயர்வு, நிறைவு, முடிவு – எல்லாம் அவரது உள்வெளிச்சத்திற்கு உடனே வந்துவிடுகின்றன.

- **கண்ணுக்குள் கருக்கொண்ட காந்த உருவம் !**

சிரிக்கிறார். அது என்ன வகைச் சிரிப்பு ? கோபியர்களை மயக்குகிற கிருஷ்ணனின் கொள்ளை வனப்பா ? இல்லை – யசோதைக்குப்பிடி கொடுக்காமல் வெண்ணெயோடு விடை சொன்ன கண்ணனின் கனைப்பா ? சொற்கள்தான் ஆடைகட்டி ஆடும் அந்த நிர்வாண உண்மை நழுவி நழுவி மேலே எழும்; நாடும்; நர்த்தனமாடும். இது ஒரு சீதளச் சூரியனின் சிருங்காரதரிசனம். எழுதிக்காட்ட இயலாது. இனிப்பை எவ்வாறு எழுத்தில் வடிப்பது ?

- **முகப்பூச்சுக்களைப் பார்த்த எனக்கு முகம் தெரிகிற முதல் முறை இது !**

மழைவிழுந்த பனை ஈரக்கறுப்பு, பற்கள் காவியேறிய கிராமத்து சின்ன மொச்சைகள் – உடல் ஆடு மேய்த்து, அலைந்து வைரமானது – பிரம்மவித்தை அறிந்ததால் ஆன்மபலத்தில் பொலிகிற அழுத்தமான உடல்வாகு, கரைபுரளும் காட்டாற்றுக்கு ஒப்பான சக்தியைத் தாங்கிக் கொள்ளுகிறாரே அதுவும் ஒரு தவம். ஏனிந்தக் கூட்டம் என்று ஒருபுறம் அங்கலாய்க்கிறார். தன்னொத்த ஏழைகளுக்கு ஏதேனும் தயாளம் கிடைக்க வேண்டுமே என்கிற இரக்க வீழ்ச்சி மறுபுறம். அலையாட்டம் புரிகிறது. அவதார மகிமை தெரிகிறது.

- **’நமக்கு எல்லாரும் ஒண்ணுதான வேய்... ?**

”விதைகள் என்னிடம் விதைக்கிறவன் நீதான். உன் மாதிரி அறிஞர்கள், மேதைகள் என்னிடம் வருவார்கள் என்று சொல்லப் பட்டிருக்கிறது. நீ வந்து விட்டாய்" என்னென்னவோ சொல்லுகிறார். ’விதைக்கிறவன் நீதான்; தூவி விதை" – என்று என்னிடம் சொல்லுகிறார். என்னை எனக்குக் காட்டினார். நான் ஏன் இங்கு வந்தேன்; என்ன ஆவேன் என்கிற முதல் அதிகாரத்தைப் பிரித்து வைத்தார். எனக்கு அதில் பெருமை வரவில்லை. காரணம், என் பாத்திரத்தில் தங்க நாணயம் விழுந்ததற்காக பெருமைப்படுவது எப்படி ? பிச்சைக்காக ஒரு பெருமையா ? அவர் சொன்னவைகளுக்கு வியட்நாம்வீடு சுந்தரமும், சுந்தரராஜனும், எனது துணைமயிலும் சாட்சிகள். மண்புழுவிற்கு மகுடம் கிடைத்து விட்டது. தவிட்டுப் புறாவிற்கு தானியக் களஞ்சியமே கிடைத்துவிட்டது. பிறகு நடந்தவைகளை எவரிடமும் சொல்ல வேண்டாம் என்று உத்தரவிட்டு விட்டார்.

- **இனிப்பை எப்படி எழுத்தில் வடிப்பது ?**

ஆகவே அவர் எனக்குச் சொன்னவைகளை, எதிர்காலக் குறிப்புகளை, பிறவற்றை அவர் உத்தரவின்றி உலகத்திற்குச் ’சொல்ல இயலாது. என்றாலும், இந்த அற்புதம்தனை, கண் பெற்றோரே, ஒருமுறையாவது உங்கள் விழிகளால் தழுவுங்கள்; ஆன்மாவில் அள்ளுங்கள். (தொடரும்)

# 3–வது வாரம்

அருளாளர் யாகவா முனிவர் அற்புத அவதாரி. இருளில் சிக்கிக் கிடக்கிற இந்த உலகத்தில் வெளிச்சப் புள்ளிகளை வீசி எறிவதற்காக வந்தவர் அவர். அரக்கன் அசுரன், தடாயன் ஆகிய தீய சக்திகளை அழித்து மனித குலத்தைக் கடைத்தேற்றுவதற்காக வந்த ககன முனிவர் இவர். இந்தத்தீமைகளை அழிக்கிற முயற்சியில் உயிருக்கு ஆபத்தான பல போராட்டங்களை அவர் சந்திக்க நேர்ந்தது. மந்திர தந்திரங்களால் தீமை செய்கிற இருளின் புத்திரர்கள் யாகவா முனிவரின் வெற்றியால் இடிந்து கிடக்கிறார்கள். அர்த்தமில்லாத சடங்குகளுக்கும், ஆரவாரமே மிஞ்சிக் கிடக்கிற வழிபாட்டு முறைகளுக்கும் எதிராகக் குரல் கொடுக்கிறார் யாகவா முனிவர். கர்மாவால் பரத்தியை அடைய இயலாது; தர்மத்தால் மாத்திரமே விண்ணுலகைச் சென்று சேரலாம் என்றும் அவர் அறிவுறுத்துகிறார்.

''யாகவா" என்றால் என்ன பொருள்? காற்று, நீர், நட்சத்திரங்கள் இவைகளின் கூட்டுத் தொகுதியே யாகவா. யாகவா முனிவரின் ஆணைக்கு இந்த மூன்று படைப்புகளும் அடிபணிகின்றன. ஞானப் பழமாக விளங்குகின்ற யாகவா முனிவரின் ஞானத்தில் பங்குபெறுவோர் வருவார்களா என்று அவர் எதிர்பார்க்கின்றார். ஆனால் வருகிறவர்களில் அநேகர் கண்ணீரோடும் கவலையோடும் வருவதால் அவர்களுக்கு ஆறுதல் தருவதும் அவருக்கு வேலையாகி விடுகிறது.

பணத்திலே புரளுகின்ற பளிங்கு மண்டப வாசிகளாக இருந்தாலும், உல்லாசபுரியிலிருந்து ஊராள்வோராக இருந்தாலும் ஒருவரிடமிருந்தும் ஒரு செப்புக்காசு அவர் இதுவரை பெற்றதில்லை .. அவர் அளவிற்கு ஆற்றல் பெற்றவேறொருவர் கோடிக்கணக்கில் குவித்துவிடுவார் ஆனால் யாகவா முனிவர் எல்லாவற்றிற்கும் மாறுபட்ட மனிதர். இன்றும் எளிமையிலேயே ஏற்றம் காணுகின்றார்.

கடந்து வந்த பாதைகளை இன்றும் மறக்காத கருணைவள்ளல் அவர். திருச்செந்தூர், அம்மன்புரத்தில் சின்னஞ்சிறுவயதில் அவருக்கு நிகழ்ந்தவைகளை ஒரு நாள் எங்களுடன் அவர் பகிர்ந்து கொண்டார். நானும், என் இல்லாளும் நெஞ்சம் குலுங்க, நினைவு தடுமாற இந்த நிகழ்ச்சிகளை ஒரு முன்னிரவுப் பொழுதில் கேட்டுக் கொண்டிருந்தோம்.

வாட்டும் வறுமைக்கு ஆட்பட்ட யாகவா முனிவர், சின்னஞ் சிறுவயதில் தன்னொத்த வயதுச்சிறுவர்களோடு திருமணப் பந்திகளுக்குச் சாப்பிடச் செல்லுவது உண்டாம். அவ்வாறு பசிக்கு உணவு தேடிச் சென்ற இந்த ஞானப்பறவையின் அடிப்படை தெரியாத அந்தகர்கள், இவரது முகத்தைப் பார்த்ததும், கால்கள் இரண்டையும் பிடித்து கடகடவென இழுத்து வெளியில் வீசி விடுவார்களாம். இந்தக் கொடுமை உலகத்திற்கு வந்த எந்த மார்க்க தரிசிக்கும், தீர்க்கதரிசிக்கும் நிகழ்ந்ததாக நான் 'இதுவரை படித்ததில்லை.

உண்ணச்சோறு கிடைக்காத அந்த நாளை இன்னமும் யாகவர் நெஞ்சில் நிறுத்தி வைத்திருக்கிறார் வெளிச்சப் புள்ளிகளாக மாறிப் போன அவரது கண்களிலிருந்து கண்ணீர் வழியவில்லையே தவிர கேட்டுக் கொண்டிருந்த எங்களுக்குள் உப்பு நீர்வெள்ளம் உடைப்பெடுத்தது. சின்னஞ்சிறு வயதில் இவரைக் காணவில்லை என்றால் இவரது அன்புத்தாயார் இசக்கியம்மாள் எங்கே பறவைகள் கூட்டமாக வாழ்கின்றன என்றுதான் தேடுவார்களாம். எங்கே பறவைகள் கூட்டம் கூட்டமாக சேர்ந்து நிற்கின்றனவோ அங்கே சின்ன வயது யாகவர் தன்னை மறந்த ஞானலயத்தில் மூழ்கியிருப்பாராம். இலட்சுமண நாடார், இசக்கியம்மாள் தம்பதிகளுக்கும் பிறந்த இரட்டையரில் இவர் இளையவர். இலட்சுமணன் என்கிற திருநாமம் சூட்டப்பட்ட இவரே இன்று யாகவா முனிவராகக் காட்சி தருகிறார். 1941 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 2ஆம் தேதி இவர் பிறந்திருக்கிறார். இவரைத் தாயின் கருவிலேயே அழிக்க நினைத்த அசுர சக்திகள் தோல்வி பெற்றிருக்கின்றன. இது இவரது 54வது பிறவி ஆகும்; இதுவே இவரது இறுதிப் பிறவி என்று அறிவித்துள்ளார்.

- **எளிமையில் ஏற்றம் காணும் ஏந்தல்! நடந்து வந்த பாதைகளை நாளும் நினைக்கும் நல்லவர்!**
- **உண்ணச் சோறு கிடைக்காத சின்னஞ்சிறு வயது!**
- **பாத்திரம் அறிந்து பிச்சை இடுகிற பண்பாளர்!**
- **நிகழ்ச்சிகளை முன்கூட்டியே பார்த்துவிடுகிற நிலைக் கண்ணாடி!**
- **மேதைகளே வாருங்கள்! புலவர்களே புறப்படுங்கள்!**
- **ஞான லயத்தில் மூழ்கிய மோனப்பறவை!**

எங்களோடு அவர் பகிர்ந்து கொண்ட எதிர்கால கணிப்புகள் பலவற்றை நான் இப்போதைக்கு எழுத இயலாமல் இருக்கிறேன். எத்தனையோ அற்புதங்கள் நிகழுகின்றன. இறந்தவர்கள் உயிர் பெறுகிறார்கள். குழந்தை இல்லாத பெண்கள் தாய்மை அடைந்து விடுகிறார்கள். வானப்பறவைகள் இறக்கைகளை அடித்துக் கொண்டு வளைய வந்து வணங்குகின்றன; உலகம் முழுவதும் நடைபெறப் போகிற நிகழ்ச்சிகள் இவருக்கு முன்னரே தெரிந்துவிடுகின்றன.

இருந்தும் ஆயிரக்கணக்கான அற்புதங்களுக்குச் சாட்சிகளாக இருக்கிறவர்களுக்கு அவர் இடுகிற முதற்கட்டளை ”இவைகளை எவருக்கும் அறிவிக்க வேண்டாம் என்பதுதான்.”

வேத வேதாந்தத்தின் வெளி முடிவாக விளங்குகின்ற இந்த ஞானியர்கோன், பொதுமக்களுக்குப் புரிந்திட வேண்டும் என்பதற்காகத் தனது தத்துவ முத்துக்களைச் சாதாரண மொழியில் தவழவிடுகிறார். கொடுத்து வைத்தவர்கள் பிடித்துக் கொள்வார்கள்.

”யாகவா முனிவர் காற்றும், நீரும், நட்சத்திரமும் ஆவார். அவரே அன்பாகவும், அறிவாகவும், ஆற்றலாகவும் இருக்கிறார். அவரை உன் உடல் உணரா விட்டாலும் உன் ஆன்மா உணரும்”

”எப்படியும் வாழலாம் என்று வாழ்ந்தால் நீ வாழ்வில் துன்பமே காண்பாய். இதுவே ஆதித்துவம் (உண்மை )" "ஊருக்குப் பெரியவன் என்கின்ற எண்ணம் உனக்கு வேண்டாம்; உதவிக்குப் பெரியவனாக இரு" ”மனிதர்களை ஊக்குவிக்கவும் உணர்விக்கவும், அறிவு பெறச்செய்யவும் வந்தவர் யாகவா முனிவர். இவரே உண்மை ஆனவர்; யாகத்துவம், இணைத்துவம் எவை என நீ அறியச்செய்கிறார்.

இவரை உணராமல் விருப்பம்போல் ஏன் இருக்கின்றாய் ? உன் சொல் அழியாதது போல இவ்வுலகமும் அழியாது என நம்பு "

”உன்னைப்பற்றி அறியாமல் நீ வாழும் உலகமே சிறைச்சாலை” – இவைகளெல்லாம் யாகவா முனிவரின் ஆயிரக்கணக்கான பொன் மொழிகளில் சில. படிக்கச் சாதாரணமாகத் தோன்றுகிற இந்த ஞான மொழிகளுக்குள் பிரம்மப் பிரவாகமே தேங்கி நிற்கிறது என்பதை உணர்ந்தவர்களே உணருவார்கள்."

"கல்லைப் போன்று ஆடம்பரமில்லாத இந்தக்ககன ஞானியின் சௌந்தர்ய விலாசத்தில் இருந்த போது ஒருநாள் என் பொறி கலங்குகிறமாதிரி யாகவா முனிவர் ஒரு கேள்வி கேட்டார்.

”பிள்ளையாரை எல்லோரும் கும்பிடுகிறார்களே; பிள்ளையார் மாதிரி குழந்தை பிறந்தால் தாய் பால் கொடுப்பாளா ?" என்று கேட்டார். தலையே சுற்றியது. எவ்வளவு ஆழமான கேள்வி! பதிலை எங்கே சென்று தேடுவது ?

"அப்பா" என்று நெருங்கிய நேசர்களால் அன்புடன் அழைக்கப்படும் இந்தப் பெரியாருக்குப் பணிவிடை செய்கிற பாக்கியம் பெற்ற பெண்மணி புஷ்பம் அம்மாள்.

கருணையே வடிவாக, எப்போதும் மலர்ச்சியோடும், மகிழ்ச்சியோடும், பணிவிடையே வாழ்க்கையாக வளர்ந்து வருகிற’ இந்தத் தாயாரைப் பார்ப்பதற்கு தெய்வப் பெண்ணைப் போலவே இருக்கிறது. இவர்களது நல்லறத்திற்குள்ளேயே ஒரு சுகந்தமான கதை இருக்கிறது. அதைப்பிறி தொரு முறை சொல்லுவேன்.

எதிரில் உட்கார்ந்தால் எவர் என்று கண்டு கொள்ளும் யாகவா முனிவர், தகுந்தவரா என்று சோதித்து பிறகே அருள் பாலிக்கிறார். பாத்திரமறிந்து பிச்சையிடுகிற பண்பாளர் இவர்.

அற்புத மனிதரான இவரைத்தேடி மக்கள் ஆயிரக்கணக்கில் கூடுகிறார்கள். எனினும் அவரே எடுத்துச் சொன்னபடி, மேதைகள், அறிஞர்கள், புலவர்கள் அவரோடு தர்க்கிக்கிற காலம் வந்து விட்டதாம்.

- **தேடிப் பணிவிடை செய்கிற தெய்வப்பெண் !**

ஆகவே, தங்களை உரைத்துப் பார்க்காமல் இருக்கிற மேதைகளே, புத்தகங்களுக்குள்ளேயே புதைந்து கிடக்கிற அறிஞர்களே, பாடல் வரிசைகளிலேயே பள்ளி கொள்ளுகிற புலவர்களே, கண்ணுக்கு முன்னே விரிந்து கிடக்கிற இந்த ஞான சாகரத்தைச் சந்தித்துத் தர்க்கிக்க நீங்கள் எல்லோரும் வாருங்கள் என்று உங்களை அன்புடன் அழைக்கின்றேன். (தொடரும்)

## 4—வது வாரம்

இன்று காலை ஒரு எழுத்தாளர் வந்தார். ”என்ன யாகவரைப் பற்றி இப்படி எழுதுகிறீர்களே, தெரிந்து கொண்டுதான் எழுதுகிறீர்களா ?" என்று கேட்டார்.

’'தெரிவதற்காகவும் தெளிவதற்காகவும் எழுதுகிறேன்" என்றேன்.

’வலம்புரியார் அல்லவா; வார்த்தைகளைப் பற்றி கேட்கவா வேண்டும் !" என்றார். ”நடனக்காரியின் கால்களில் இருந்து சலங்கைச் சத்தம் வருவதற்காக சங்கடப்பட வேண்டாம்” என்றேன்.

’'நான் யாகவரைப் பற்றி வேறு மாதிரியல்லவா கேள்விப்படுகிறேன்" என்றார்.

”என்ன சொல்லுங்களேன் !” என்றேன்.

நீண்ட நேரம் சொல்லி முடித்த பிறகு, ”இதையெல்லாம் எழுதி விடாதீர்கள்” என்று கேட்டுக் கொண்டார்.

”எதிராகச் சொல்லுகிறீர்கள். எழுதிவிடாதீர்கள் என்றும் கேட்டுக் கொள்கிறீர்கள். பிறகு ஆதரவான கருத்துக்கள் மாத்திரமே வருவதுதானே இயற்கை" என்றேன்.

"முனிவரைப் பற்றி என்ன முடிவுக்கு வந்தீர்கள்" என்று கேட்டார்.

”அவர் மாதிரி மகான்களைப் பற்றி நான் எந்த முடிவுக்கும் வரமுடியாது" என்றேன்.

"நீங்களே முடிவுக்கு வராமல் அவரைப் பாராட்டி எழுதுவது பாதகமல்லவா ?” என்றார்.

’'எல்லோரும் தெரிந்து கொள்ளுங்கள் என்றுதான் அழைக்கிறேன். அவரவர்கள் தெரிந்து கொள்ளுவார்கள் என்றும் நம்புகிறேன்” என்றேன்.

- **தெரிந்து கொண்டுதான் எழுதுகிறீர்களா ?**
- **தெரிவதற்காகவும் தெளிவதற்காகவும் எழுதுகிறேன் !**

”உங்கள் அனுபவம் எப்படி ?" என்றார்.

”காதலியின் இன்பத்தை கட்டில் உணரமுடியாது” என்றேன்.

”நீங்கள் மயக்கத்தில் இருக்கிறீர்கள்” என்றார்.

"மயங்காதவர்கள் தெளிவதில்லை ?" என்றேன்.

"நானே எல்லாம் என்கிறாரே யாகவர்" என்றார்.

"இயேசு பெருமான் நானே வழி என்று சொல்லவில்லையா ? என்றேன்.

"இருவரையும் நீங்கள் ஒப்பிடுகிறீர்களா ?" என்று கேட்டார்.

"கடந்ததெல்லாம் பெருமைக்குரியதாகவும், நிகழ்வது எல்லாம் சிறுமைக்குரியதாகவுமே மனிதர்களால் உணரப் படுகிறது. வேண்டியவர்களுக்கு விரும்புகிற விளக்கங்களை சேர்த்துக் கொள்ளுகிறோம். வேண்டாதவர்களின் மீது ஒருவரும் விரும்பாதவிளக்கங்களை ஒட்டி வைத்து விடுகிறோம். இது நமது இயற்கை" என்றேன்.

"மனைவி மக்களோடு தான் வாழ்கிறார்" என்றார்.

"நபிகள் நாயகம் அவ்வாறுதானே வாழ்ந்தார்" என்றேன்.

"ஒரு முனிவருக்கு வேண்டியவர்கள் வேண்டாதவர்கள் என்று இருக்கலாமா ?" என்று கேட்டார்.

"இயேசு நாதர் இறந்து போனவர்கள் எல்லோருக்காகவும் அழவில்லையே! தனது நண்பன் லாசருக்காகத்தானே கண்ணீர் வடித்தார்" என்றேன்.

"கடவுளைப் பற்றி அவர் ஒன்றும் சொல்லவில்லையே ?" என்று கேட்டார்.

"புத்தர் கடவுளைப் போதித்தது உண்டா ?" என்று கேட்டேன்.

"புத்தரோடு அவரை ஒப்பிடலாமா ? என்று கேட்டார்.

"காலை விட சுவடு முக்கியமாகத் தெரிவது இயற்கைதான்" என்றேன்.

"நான் எதிர்பார்த்தபடி அவர் இல்லையே" என்றார்.

"அவர் 'எதிர்பார்க்கிறபடி நாம் இருப்பதில்லையே !" என்றேன்.

"அவரை எதிர்க்கிறவர்களுக்கு துன்பம் வருகிறதே" என்றார்.

''அறியாதவர் களுக்குத்தான் இன்பமும் துன்பமும். அறிந்தவர்களுக்கு இரண்டும் ஒன்றுதானே! நெருப்பில் உருக்கப்படுகிற போது தங்கத்துக்கு துன்பம்தான். அழகியின் கழுத்தில் அட்டியலாகக்கிடக்கிற போது இன்பம்தானே! பெறுகிற போது தாய்க்கு துன்பம்தான்! பெற்ற குழந்தையை கொஞ்சுகிற போது..... ?" "நீங்கள் ஏமாற்றப் படுகிறீர்கள் ? என்றார்.

"ஏமாறுவதிலே கூட ஒரு சுகம் இருக்கிறது" என்றேன்.

"காரியவாதிகள் தான் அவரை சுற்றுகிறார்கள்" என்றார்.

"நீங்கள் மாத்திரம் கடலை உருண்டை கிடைக்கும் என்றா போனீர்கள்? சுவாசிக்கிறவர்கள் எல்லோரும் காரியவாதிகளே" என்றேன்.

"அவரிடத்தில் ஏதோ ஒரு சக்தி இருக்கிறது உண்மைதான்" என்றார்.

"தெரிந்தால் சரி" என்றேன். பிறகு நான் சொன்னேன்:

"சமீபத்தில்தான் நான் அவரை சந்தித்தேன். ஏற்கெனவே அவரை சந்திக்கிறவர்களில் ஒருவர், நான் முனிவரை சந்திப்பது பொறுக்காமல் என்னை திட்டித் தீர்த்துக் கொண்டிருக்கிறார். என்னைத்தேறாதவன், தெளியாதவன், காரியவாதி, கலகக்காரன் என்றெல்லாம் பேசுகிறார். அழுக்கு நெருப்பில் அன்றாடம் அணைந்து எரிகிறார். அதற்கு என்ன காரணம்? சக்தி படைத்த இந்த வேதச் சூரியனிடமிருந்து, சாதாரண வலம்புரிஜான் விளக்கேற்றுவதற்காகக்கூட நெருப்பு எடுத்து விடக்கூடாது என்பது தானே இவரின் நோக்கம்? அடுத்தவர்களுக்கு யாகவரை அறிமுகப்படுத்துவதற்கே இப்போது இவர் அச்சப்படுகிறார் என்றால், யாகவர் உண்மையாகவே சக்திகளின் சாம்ராஜ்யம் என்று தானே பொருள் என்றேன்.

வள்ளலார், பரமஹம்சர், ரமண மகரிஷி போன்ற ஞான நதிகளோடு எல்லாம் நான் ஒப்பிட்டுக் காட்டி உரையாற்றிய பிறகு, அந்த நண்பர் யாகவரிடத்தில் சக்தி இருப்பது உண்மைதான். உண்மைதான் என்று சொல்லிக் கொண்டே போனார்.

வந்தவரிடத்திலும் சக்தி இருக்கிறது. இல்லாவிட்டால் அவர் என்னிடம் பேசியிருக்க மாட்டார். எழுந்திருக்க மாட்டார். நடந்திருக்க மாட்டார். சக்தி துருப்பிடித்த இரும்பாக இருப்பதும் உண்டு. துளைக்கக்கூடிய துப்பாக்கிக் குண்டாக விளங்குவதும் உண்டு. ஞானமார்க்கத்தில், யாகவரைப் போன்ற பெரியாரின் அசுர வடிவத்தை அவ்வளவு எளிதாகக் கண்டு கொள்ள இயலாது. ஒரு பாமர ஞானி, படித்தவர்கள் அறியாத, அவர்களை அதிர்ச்சிக்கு உள்ளாக்குகிற, பலதத்துவங்களைச் சொல்லுகிறார். இவருக்கு இந்த ஞானம் எங்கிருந்து வந்தது? இந்த ஆன்ம ஞானி பெற்றோர்களை வணங்கு, பிறருக்கு உதவு என்றுதானே சொல்லுகிறார்.

இதில் என்ன தவறு இருக்க இயலும் ? ஓங்கிய வேடத்திற்குள் எதையும் ஒளித்து வைக்காமல், உள்ளது உள்ளபடியே வாழ்கிறாரே இந்த எளிமையில் என்ன தவறு இருக்க இயலும் ?

- **காதலியின் இன்பத்தைக் கட்டில் உணர முடியாது !**
- **புத்தர் கடவுளைப் போதித் தாரா ?**
- **வாருங்கள் என்கிறது நதி; வராதே என்கிறது நாணல் !**
- **செக்திகளின் சாம்ராஜ்யத்தில் சங்கமமாகுங்கள் !**
- **கங்கை மலைக்கு சொந்தமா ? கடலுக்கு சொந்தமா ?**

”ஒருநாள் தம் மகனைக்காணவில்லை என்று ஊரெல்லாம் யாகவர் தேடி அலைந்தார்” என்றார் வந்தவர். அன்னை மறைந்த போது பட்டினத்தடிகள் அழுதார்; அரற்றினார் என்கிறார்கள். பட்டினத்தடிகளின் பாசம் இவர்களுக்குப் பிழையாகப்படவில்லை. யாகவரின் நேசம்தான் தவறாகப்படுகிறது. பிடித்தால் ஒரு கட்சி. பிடிக்கா விட்டால் இன்னொருகட்சி. இதற்கு விதிவிலக்கு எவருமில்லை. யாகவர் ஆட்களைச் சோதிக்கிறார். வருகிறவர் எப்படிப்பட்ட பாத்திரம் என்று பார்க்கிறார். இந்த சோதனைகளிலேயே சிலர் சோர்ந்து விடுகிறார்கள். அற்புதங்கள் நடந்தால் நம்புவோம் என்றார் வந்தவர்.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் இப்படி அற்புதங்களுக்காக வரிசையில் நின்றவர்களை ஏசுநாதர் வார்த்தைகளால் வாட்டி எடுத்திருக்கிறார். "இந்த சந்ததி ஒரு அடையாளத்தை தேடுகிறது என்கிற பைபிள் வரிகளைப் படித்துப்பாருங்கள். அவர் அற்புதம் செய்து அதனால் அவரை நீ நம்பி, அவருக்கு என்ன ஆக வேண்டியதிருக்கிறது ?

பொய் சொல்லுகிறவனுக்கும், பொறாமைப் படுகிறவனுக்கும், அவரிடத்தில் இடம் இல்லை. கூழாங்கல் இமயமாக வேண்டும் என்று குதித்தால் எப்படி ? நதியிடம் கோபித்துக் கொண்டு குளிக்காமல் நடந்தால் உனக்கல்லவா நட்டம் ? யாகவ முனிவர் ஒரு காருண்ய கங்கை. இங்கே எல்லோரும் வரலாம். கங்கை, மலைக்கும் சொந்தமில்லை; கடலுக்கும் சொந்தமில்லை. இந்த கங்கையில் தாகத்திற்கு அள்ளிக்குடிக்கிறவனும் உண்டு.

ஆனந்தமாக நீந்தி விளையாடுகிறவனும் உண்டு. அது அவனவன் விதிப்படி. யாரும் வரலாம் என்கிறது யாகவநதி. அதன்கரையில் முளைத்த நாணல் ஒன்று யாவரும் வந்துவிடக்கூடாது என்கிறது, தன்னையே வியந்து கொள்ளுகிறது. நெல்லும் ஒருவகைப்புல்லே என்று நீண்டதத்துவம் பேசுகிறது. காலம் இவர்களிடம் கருணை காட்டட்டும். நடந்து போகிற நாட்கள் இவர்களை நல்லவர்கள் ஆக்கட்டும்! (தொடரும்.)

## 5—வது வாரம்

முனிவர்களை அவ்வளவு எளிதாக உணர்ந்து கொள்ள இயலாது. தோற்றத்திற்கு அமைதியான, ஆரவாரம் இல்லாத கடலைப் போன்று தோன்றுவார்கள். கடலுக்குள் பவளப்பாறைகளும் இருக்கலாம்; படர்ந்த செடி கொடிகளும் இருக்கலாம். சலவைக்கல் மண்டபங்களும் இருக்கலாம்; சரித்திரம் அறியாத புராதனங்களும் புதைந்து கிடக்கலாம். கடலின் ஆழத்தைக் காண்பது எளிதல்ல. அதற்கு மூச்சடக்க வேண்டும்; மூழ்க வேண்டும். இன்றைக்கும் பழக்கத்தில் உள்ள அறிவியல் கருவிகளைக் கொண்டு கூட கடலின் உண்மையான ஆழத்தை அறிவதற்கு பெரு முயற்சி வேண்டும்.

யாகவா முனிவர் கடலைப் போன்றவர். அலை எறிந்து விளையாடும் இந்த அற்புதக் கடலை ஓரசாரத்தில் நின்று வியக்கலாமே தவிர. உள்ளே நுழைந்து அதன் ஆழ நீளத்தை அறிவது எவராலும் இயலாது. இதை எழுதுகிற நான் கொஞ்சம் கொஞ்சமாக அவரை அறிந்து வருகிறேன்.'

'காட்டு வழியில் நடக்கிறாய்; தாகம் எடுக்கிறது. கிணற்றுக்குள் தண்ணீர் கிடக்கிறது. எட்டிப் பார்க்கிறாய். இருந்தும் உன் தாகம் தீருகிறதா? அதற்குப் பனை ஓலை வேண்டும்; தோண்டி செய்ய வேண்டும்; கயிறு வேண்டும்; இறைக்கிற முயற்சி வேண்டும். பிறகு தான் தண்ணீர் உனது தாகத்தைத் தீர்க்கும்" என்று அருளாளர் யாகவா முனிவர் ஒருநாள் எங்களுடன் உரையாடிக் கொண்டிருந்தபோது குறிப்பிட்டார். அதுதான் உண்மை.

எந்த முயற்சியும் இல்லாமல் முனிவர்களை அளக்கப் போவதும், ஆழம் பார்ப்பதும் தவறு.

சின்ன வயதில் யாகவா முனிவரின் தாயார் இவரை ’மாயக்காரன்’ என்றுதான் அழைப்பார்களாம். பாம்புகளோடும் பறவைகளோடும் – எப்போதும் காணப்படும் இவரை ’மாயக்காரன்’ என்று தாயார் இசக்கியம்மாள் அழைத்தது தவறில்லைதான். யாகப் பிரபஞ்சத்திற்கு வழிகாட்டுவதற்காகப் பிறந்த இவர் இவரே அல்ல. உற்று நோக்கி, உள்ளம் உருக உணருகிறவர்களுக்கு மாத்திரமே இவர் இன்னாரென்பது புலப்படும்.

”உற்று நோக்கினால் போதாது; சற்றாவது சிந்தித்தால் தான் புரியும்’’ என்று யாகவ முனிவரே அடிக்கடி குறிப்பிடுவார். "கிரகங்களைக் கணிக்காதே; கடமையைச் செய் – இதுவும் அந்த யாகவக் கடல் எறிந்த ககன முத்துதான்.

- **யாகவர் – ஒரு ஞானக்கடல்! கடலின் ஆழத்தைக் கண்டவர் யார்?**
- **முனிவர்களை ஆழம் பார்ப்பதும் அளப்பதும் அடிமுட்டாள்தனம்!**

பழிவாங்காதே என்கிறார் முனிவர்; பழிவாங்குகிறவர்களே இந்த உலகத்தில் ஊனத்தோடு பிறக்கிறார்கள் என்கிறார். ”இனம் – இனம் இரண்டு – இனத்திற்குள்ளே உள்ள ஆத்ம குணம் ஒன்று"

’’தர்மம் பண்ணுகிறவர்கள் மேலானவர்கள் கர்மம் பண்ணுகிறவர்கள் கீழானவர்கள். 1990 ஆம் ஆண்டிலிருந்து உலகத்தை இடி, மின்னல், அழிவுகள் தாக்கும். பல அற்புதங்கள் நடக்கும். பறந்து வரும் அதிசயப் பறவைகள் தீயவர்களைப் பழிவாங்கும்.

5,000 ஆண்டுகளுக்கும் முன்னர் கொலைகள், கொள்ளைகள் இப்படி நடந்ததில்லை. ’இனி நல்லவர்கள் பிறப்பார்கள். அந்தக் காலம் வந்துவிட்டது." ”என் விதை அப்படியே இருக்கிறது. அதற்கு அடிக்கும் நச்சு மருந்தை உண்கிற நீதான் அழிகிறாய்.’

1983ஆம் ஆண்டிலிருந்து தாங்க முடியாத தலைபாரத்தோடு இருந்த முனிவர் 21 பாம்புகளின் உயிரைக்குடிக்கும் உற்பாதங்களிலிருந்து தப்பித்து வந்த அதிசயத்தைச் சொன்னபோது மேனி சிலிர்த்தது.

”குதிரையின் கடிவாளம் உன்னிடம்; உன்னுடைய கடிவாளம் என்னிடம்" என்று முனிவர் உரைத்தபோது கால வெள்ளம் அழிக்க இயலாத கல்வெட்டாக அவரது ஞானமொழிகள் பூத்துச் சிரித்தன.

”விதையொன்று மரமானால் நிழலுக்குத் தான் உதவும்; நீ வளர்ந்து யாருக்கு உதவுகிறாய் ?" – ஆணி அடிப்பது போன்ற கேள்வி.

”சடை முடியும், தாடியும் வைத்து "எதற்கு ?" ”பன்றியின் மயிரும் விலைபோகக் கண்டேன்; பாம்பின் தோலும் விலை போகக் கண்டேன்; உன் கழிவைத்தின்னும் பன்றி விலை போகின்றது; நீ விலை போகின்றாயா ?"

”உழவன் கோழி கூவுவதை எதிர்பார்த்து கலப்பையைத் தேடுகிறான்; படித்தவன் தலைமாட்டில் அலாரத்தை வைத்துக் கொண்டு அலுவலகம் போகப் பார்க்கிறான்’ பத்திரிகைக்காரர்கள் சில நேரங்களில் பரபரப்பு கருதி எதையாவது எழுதி விடுகிறார்கள் அல்லவா ? அதற்கு ஆணி அடிப்பது போல ஒரு பதில் கொடுத்தார் முனிவர்.

- **1990 ஆம் ஆண்டிலிருந்து இடி, மின்னல் தாக்குதல் அதிகமாகும் !**
- **பறவைகள் தீயவர்களைப் பழிவாங்கும் !**
- **இனி நல்லவர்கள் பிறப்பார்கள் !**
- **குதிரையின் கடிவாளம் உன்னிடம்.**
- **உனது கடிவாளம் என்னிடம் !**

’நாய் கடித்தால் மருந்து உண்டு; நாவு கடித்தால் உண்டா ?" என்று கேட்டார்.

"பெண்ணைக் கெடுக்கிறவன் அலியாய்ப் பிறக்கிறான்”

”பழத்தைக் காயாக்க முடியுமா ?”

’அறிவில் பெரிது தன்னை உணர்தல்

”முனிவர்கள், ஞானிகளின் தீர்ப்பின்படியே உலகம் நடக்கிறது”

’முனிவரைப் பாராதே; முனிவரின் தத்துவத்தைப் பார்”

இப்படி எனக்கும், எனது துணை மயிலுக்கும் கிடைத்த தத்துவ முத்துக்கள் எத்தனையோ.

யாகவா முனிவர் ஆடு, மாடு மேய்த்துத் திரிந்த காலத்தில் வாழைத் தடையைக் கோவணமாக கட்டியிருப்பாராம். அந்த நாளிலேயே ஒரு இஸ்லாமியர் இந்தக் கோலத்தில் இவரைப் படம் எடுத்திருக்கிறாராம். அவர் காயல் பட்டினத்தைச் சார்ந்தவராம். 'நாய் ஒரு நனிதப் பொருள் என்றார் ஒரு நாள். முனிவர், மற்றும் சிலரைச் சந்திக்க உள்ளே போனபோது நானும் எனது மனைவியும், தனித்திருந்தோம். அப்போது என் மனைவி 'நனிதப் பொருள் என்றால் என்ன ?' என்று கேட்டாள்.

- **பன்றியின் மயிர் விலைபோகிறது !**
- **பாம்பின் தோல் விலை போகிறது !**
- **உன் விலை என்ன ?**
- **பழத்தைக் காயாக்க முடியுமா ?**
- **இவர் இவரே அல்ல !**
- **யாரென்று அறிய யாகவரின் அருளே வேண்டும் !**
- **கடல் எறிந்த ககன முத்துக்கள் !**

"நனி என்றால் சிறந்தது. சிறந்ததில் சிறந்தது நனி" என்றேன். பிறகு, கர்நாடக மாநிலத்தில் தத்தாத்ரேயர் கோயிலில் நூற்றுக்கணக்கில் நாய்களைப் பார்த்தது, கன்னியாகுமரி கடற்கரையில் மஹாமாயாவின் காலடியில் அவ்வாறே நாய்களின் கூட்டத்தைப் பார்த்தது – இஸ்லாத்தில் நாய்களைப் பற்றிச் சொல்லப்பட்டது ஆகியவைகளைப் பற்றிச் சொல்லிக் கொண்டிருந்தேன்.

யாகவா முனிவரை அறிந்து கொள்வதற்கே ஒரு பக்குவம் வேண்டும். பக்குவப்பட்டு விட்டதாக நினைக்கிற பரம ஞானிகள் ஏன் இதுவரை யாகவரைச் சந்தித்து கேள்வி கேட்காமல் இருக்கிறார்கள் என்பதுதான் இதுவரை எனக்கு விளங்கவில்லை. ஒன்று சொல்லட்டுமா ? யாகவரை உண்மையாகவே அறிந்து கொண்டவர்கள், அவரைப்பற்றி வெளியில் சுயநலம் காரணமாகவே சொல்லமாட்டார்கள். ஆனால், நானோ எட்டுத்திசைகளுக்கும் கேட்கிற மாதிரி எடுத்து ஊதுகிறேன். கொடுத்து வைத்தவர்கள் வாருங்கள், இந்த அமுத நதியில் ஆனந்திக்க வாருங்கள். (தொடரும்)

## 6—வது வாரம்

மனிதகுலம் இந்த உலகம் தோன்றிய காலம் முதலாகவே. நல்லவனாக இருக்க வேண்டும் என்று போதிக்காத முனிவர்கள் இல்லை. நானும் நீண்டநாட்களாகவே நல்லவனாக இருந்து வருகின்றேன். நல்லவனாக நாம் இருப்பது வெகு சிரமம் என்றே எனக்குத் தோன்றுகிறது. ஆனாலும் இன்றுவரை நல்லவனாகவே இருந்து வருகின்றேன். நல்லவனாகவே எப்போதும் நாம் இருக்க வேண்டும் என்ற அவா என் உள்ளத்தில் ஆசையாக தோன்றுகின்றது. சாப்பிடுவதற்கு பணம் இருக்கின்றது. ஆனால் பசி என்று கேட்டால் பட்டினியாக இருந்து மற்றவர்களுக்கு பசியை ஆற்றுகிறேன். பணம் என்று கேட்டால் தருவதற்கு என்னிடம் இல்லை. ஆனால் மனைவியின் நகையை அடகு வைத்தாவது என் நண்பனுக்கு தரும் மனத்தை 'யாகவா' அவர்கள் தந்துள்ளார்கள். என் நண்பன் எனக்கு எவ்வளவு தொந்தரவு செய்தாலும் என் மனம் நல்லதையே இன்றுவரை நாடுவது யாகவா அருளால்தான் என்று இப்போது புரிகின்றது.

- **தம்பிரான் காப்பான் என்பது கதை.**
- **தர்மம் காக்கும் என்பதுதான் உண்மை .**
- **அருளாளர் யாகவா முனிவரின்**
- **சன்னிதிக்கு ஆயிரக்கணக்கில் கடிதங்கள் குவிகின்றன. அதிலே ஒன்று ....**

அட்டகாசத்தோடு தொடங்கிய அரக்கன், அசுரன், தடாயன் அரக்கர்களின் வாழ்க்கை எவ்வாறு ஒழிக்கப்பட்டது என்பதை தங்களின் புத்தக வரலாறு படிப்போரின் மனதை வாட்டும். தங்கள் வர லாறு மூலமாக தொடக்கத்தில் தீமை பெற்ற வெற்றியையும், முடிவினில் அடைந்த பெருமையும் தாங்கள் புத்தக வரலாறு மூலம் அறிந்தேன்.

ஒரு நாளைக்கு பல புதியவர்களைச் சந்திக்கிறேன். அதில் நல்லவர்களே இல்லை. என்னை பலவாறு பயன்படுத்திக் கொண்டு பின் உதறித் தள்ளுகிறார்கள். அப்படி உதறித் தள்ளியும் ஊருக்கு

போனால் எப்படி இருந்தாலும் என்னிடம் தான் அவன் வரவேண்டும் என்று சித்தாந்தவாதிகளாகி விடுகிறார்கள். எல்லாம் வஞ்சம், ஏமாற்று, பழி சுமத்துதல், நன்றி மறந்தவர்கள் தான் இன்றுவரை நண்பர்களாக உள்ளார்கள். அவர்கள் மத்தியில் தான் இன்றும் வாழ்கிறேன். பல பேர்களுக்கு இடையில் நல்லவனாகவே இருக்க முயற்சிக்கின்றேன். சில சமயங்களில் நண்பர்கள் செய்யும் செய்கை கள் அழக்கூடத் தோன்றுகின்றது.

இன்றும் நேற்றும் அல்ல பதினைந்து ஆண்டுகளாக இதே நிலை நீடிக்கின்றது. ஆயினும் நல்லவனாக இருந்து வருகிறேன். தங்களின் கருத்துப் படி "உன்னால் உதவிய உதவி உனக்கே உதவி" என்பதையும் மறக்கவுமில்லை மறுக்கவும் இல்லை. எதிர்பாராத செலவுகள் வந்தாலும் வரவுகளும் வருகின்றன. பத்துப்பேர் ஏமாற்றினாலும் இரண்டு பேர் உதவுகி றார்கள். நாம் நினைக்காத அளவிற்கு சுமை ஏறுகின்றது. இந்த குத்துவிளக்கிற்கு யாராவது எண்ணெய் ஊற்றிக் கொண்டே இருக்கின்றார்கள். எரியும் விளக்கில் காற்றுப்பட்டு அடிக்கடி சலனம் வருகின்றது. ஆனாலும் என் விளக்கு அணையவில்லை. ஒரேயடியாக அணைந்து போயிருப்பின் தர்மத்திலேயே எனக்கு நம்பிக்கை போயிருக்கும்.

தங்களின் நினைவால் எந்த நேரத்திலும் பேராபத்துக்கள் ஏற்படும் நேரம் ஆபத்து தடுக்கப்படுகின்றது என்ற பேருண்மையை அறிந்தேன். தங்களைப் பற்றிய சிந்தனை வளர வளர நண்பர்கள் செய் யும் எதையும் தாங்கிக் கொள்ளமுடிகின்றது. நல்லவனாக இருப்பது இதனால் சுலபமாகின்றது.

நாம் இந்துவாக இருப்பதில் பெருமைப்பட வேண்டும். அது சொல்லும் இந்து தர்மத்தை அனைவரும் ஒத்துக் கொள்ள வேண்டும். ஒரு நல்ல இந்து மற்றவர்களுக்கு தீமை செய்யமாட்டான்.

பலவாறு தங்களைப் பற்றி அவதூறு பேசிய என் நண்பன் புல்லட் வண்டியில் அடிபட்டு முகம் எல்லாம் இரத்தம் வழிய வழிய ஆகி யதை என்னால் காணமுடிந்தது. அதே தினத்தில் அவனுடன் நானும் புல்லட் வண்டியின் பின்புறம் போக வேண்டியிருந்தது. தங்களின் அருளால் அன்று எனக்கு நேர இருந்த ஆபத்து தடுக்கப்பட்டது. யாக வர் அருளால்தான் என்பதை என் நண்பரிடம் வாதிட்டேன். அவன் நம்பவில்லை.

அவன் என்னிடம் கேட்டான். காற்று, நீர், நட்சத்திரம் யாகவா என்பதை ஒத்துக்கொள்ள முடியாது என்று. நான் அங்கு வருகிறேன். அங்கு வரும் சமயத்தில் திருவல்லிக்கேணியில் மட்டும் மழை பெய்ய வைக்க முடியுமா ? என்று. 'முடியும்' என்றேன்.

என் நண்பரிடம் பந்தயம் எனக்கு பெண் குழந்தைதான் பிறக்கும் என்று அடித்து சொன்னான். தங்களிடம் வரும் போது எல்லாம் ஆணா, பெண்ணா என்று கேட்க எண்ணுவேன். கேட்காமல் வந்து விடுவேன். ஆனால் என் உள்ளத்தில் மட்டும் யாகவா "ஆண்மகவை தரவேண்டும்" என நினைத்தேன். அதே போல் என் உள்ளத்தில் 20–ம் தேதிக்குள் என் மனைவிக்கு சுகப்பிரசவம் ஆக நினைத் தேன். என் மைத்துனர் 17–ம் தேதி போனில் ஆண் பிறந்ததை தெரிவிக்கிறார் மகிழ்கின்றேன்.

அதே சமயம் இந்த உலகிற்கு எல்லோருக்கும் நன்மையே செய்யக்கூடிய ஒரு அவதாரியாக தரவேண்டும். அப்படி அவதாரியாக அவனை நீங்கள் தருவதாக இருந்தால் போன் வந்து உடனே வெளிவரும் சமயம் அவன் அவதாரியாக பிறப்பது என்றால் வெளிவந்த உடனே மழை பெய்ய வேண்டும் அப்போது அவனை எனக்கு அவதாரியாகதந்தீர்கள் என்பது பொருள் என நினைத்தேன். தங்களின் கருணையினால் அப்படியே 10 நிமிடம் மழை பொழிந்தது. இது எனக்கு நடந்தது. தாங்கள் தான் பையனுக்கு பெயர் வைக்க வேண்டும்.

இன்னொரு நண்பர் தங்களை அவதூறுவார்த்தை சொன்னதன் பலன் சைக்கிளில் போய்காலில் அடிபட்டு வீழ்ந்தான். மறுவாரம் அவனுக்குத் திருமணம். திருமணத்தன்று போட்டோ எடுத்தார்கள். அப்போது அந்த திருமணத்திற்கு சென்று இருந்தேன். போட்டோவில் காலில் அந்தத் தழும்பு தெரிந்தது. இருந்தாலும் என் நண்பர்களுக்கு அதிக சோதனை வேண்டாம். என கேட்டுக் கொள்கிறேன். செய்யும் தவற்றை உணருமாறு செய்ய வேண்டுகிறேன். அதுவே போதும். கடைசிவரை என் நண்பனிடம் வேலை செய்வேனா ? நான் சொல்வதை செய் என்று அடிக்கடி சொல்கிறான். போன ஜென்மத்தில் நான் அவதனுக்கு கடன்பட்டுள்ளேனா ? என் வாழ்வினில் வசந்தம் என்னும் நற்காற்று எப்போது வீசும் எந்த வயதில் வீசும். அதன் மூலமாக எல்லோருக்கும் நன்மை செய்து கொண்டே இருக்க வேண்டும் அதுதான் என் ஆசை.

எனக்கு நன்மையானது எது, தீமையானது எது என்பதை அறியேன். முற்றிலும் உங்களையே தஞ்சமடைந்துள்ளேன். எனது ஆன்மீக வாழ்க்கைக்குத் தேவையான அனைத்தையும் மேன்மையான நன்மை அளிக்கவல்ல நெறியிலேயே என்னை அழைத்துச் செல்க. தங்களையே நினைப்பதற்கும், தியானிப்பதற்கும் வலிமையும் அனைவருக்கும் தந்தருள்க.

தாயும் நீயே தந்தையும் நீயே. அன்புக்குரிய நண்பனும் நீயே. வழிகாட்டியும் நீயே. பலங்களின் இருப்பிடம். நீயே. தங்களுடைய பலத்தை அனைவருக்கும் தா. பிரபஞ்சத்தின் பளு அனைத்தையும் நீயே சுமக்கிறாய். வாழ்க்கையின் சுமையைத் தாங்கிடும் ஆற்றலை அனைவருக்கும் கொடு.

உங்களை அண்டியிருப்பவர்களுக்கும், குறை வைக்காமல் வாழ்வை நடத்திச் செல்ல வேண்டும். வறுமை, நோய் முதலிய குறைபாடுகள் இருந்தால் வாழ்க்கை பாதிக்கும்.

சமூகத்தை வளப்படுத்த நல்ல நெறிகளை அவ்வப்போது வருபவர்களுக்கு வழங்க வேண்டும் என்பது என் ஆசை. வாழ்க்கையில் இன்பத்தைக் கண்டு இறுமாப்போ (அத் துன்பத்தைக் கண்டு) துயரமோ கொள்ளுதல் கூடாது. ஏனெனில் இன்பத்தின் பின் துன்பம், மாறி மாறி வருவது வாழ்க்கையின் நியதி என்பது முற்றிலும் உண்மை. எல்லோரும் தங்களின் சொற்படி நடந்து யுகத்தை விட்டு யாகத்தை அடைய வேண்டுகிறேன்.

• **அருளாளர் யாகவ முனிவரை ஆயிரக்கணக்கானவர்கள் சந்தித்து வருகிறார்கள். பிரதி ஞாயிற்றுக்கிழமை மாலை 3 மணி முதல் 6 மணி வரை மாத்திரமே சந்திப்பது சந்திப்பவர் களுக்கு நல்லது.**

**வாழ்க ! தர்மம். தங்களை ஈன்ற தாய்க்கு என் நன்றி.**

**ஆர்.எம்.பாபு**

மே/பா. டி.எம். ராஜேந்திரன்,

13, தானப்ப தெரு, ஜாம்பஜார், திருவல்லிக்கேணி,

சென்னை – 600006

**(தொடரும்)**

## 7–வது வாரம்

யாகவா சரணம்! 1.10.1986 அன்று 'ஜுனியர் விகடன்' வார இதழில் ஒரு தமாஷ் முனிவர் என்று கட்டுரை ஒன்று வந்தது. ஒரு அருள் நதியின் ஆழம் அறியாத ஒருவர் 'தமாஷ் முனிவர்' என்று தலைப்பிட்டுவிட்டார். மற்றப்படி படிக்கவேண்டிய கட்டுரைதான். 'என்னுடன் பறவைகள் பேசுகின்றன.. என்பது சின்னத் தலைப்பு.

இந்தக் கட்டுரைத் தொடக்கத்தில்,

- **உலகில் உள்ள சாமியார்கள் அனைவருக்கும் அழிவு காலம் பிறந்துவிட்டது.**
- **இலங்கைப் பிரச்சினையில் அமைதி தீர்வுதான்; போர் கிடையாது.**
- **விரைவில் கலைஞர் முதலமைச்சர் ஆகிறார்.**
- **உலகம் அழியாது. ஆனால், கடல் வற்றிவிடும்.**
- **தீர்க்க தரிசனங்கள் நிறைவேறிய பிறகு திக்குத் தெரியாமல் நிற்பது ஏன் ?**

''இதெல்லாம் என்ன என்கிறீர்களா ? சென்னை மேடவாக்கத்தில் முளைத்திருக்கும் 'யாகவா முனிவர்' என்ற சாமியாரின் 'அருள் வாக்குகள் தான் இவை" – என்று அந்த வாராந்தரியில் கண்டிருந்தது. யாகவா முனிவர் சாமியாரும் அல்ல; இந்தப் பத்திரிகையாளர் சொன்னது போல அருள்வாக்குச் சொல்லுகிறவரும் அல்ல. அவரை அறிந்து கொள்ளுவதற்கு ஒரு ஆழம் வேண்டும். அவ்வளவுதான் இப்போதைக்குச் சொல்ல இயலும்.

இப்போது இதுவல்ல விவகாரம். கடந்த நான்கு ஆண்டுகளில் இந்த முனிவர் சொன்னவைகள் நடந்ததா இல்லையா என்று பார்க்க வேண்டாமா ?

உலகில் உள்ள சாமியார்கள் அனைவருக்கும் அழிவுகாலம் பிறந்து விட்டது – என்கிற யாகவா முனிவரின் தீர்க்கதரிசனம் கடந்த 4 ஆண்டுகளில் உண்மையாகிவிட்டது என்பதுதானே சத்தியம்!

போலிச் சாமியார்கள் அவ்வப்போது அழிந்து வருகிறார்கள் என்பது உண்மையாக இருந்தாலும் கடந்த 4 ஆண்டுகளில்

பிரபலமான சாமியார்கள் கூட அழிந்துவிட்டார்கள் என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. இலங்கைப் பிரச்சனையில் அமைதித்தீர்வு தான்; போர் கிடையாது என்று முனிவர் சொல்லியிருக்கிறார்.

இந்தியாவிற்கும், இலங்கைக்கும் போர் மூளுகிற மாதிரியான சூழ்நிலைகள் எல்லாம் இருந்து, பிறகு விலகிப்போனதை ஊர் அறியாதா ? உலகம் அறியாதா ? விரைவில் கலைஞர் முதல் அமைச்சராகிறார் என்று முனிவர் சொன்னதும் நடந்தேறியிருக்கிறது.

86 ஆம் ஆண்டில் புரட்சித் தலைவர் முதலமைச்சராக இருந்த போதல்லவா கலைஞர் முதலமைச்சராவார் என்று யாகவ முனிவர் குறிப்பிட்டிருக்கிறார். கடல் வற்றிவிடும் என்றிருக்கிறார்.

கடல் வற்றி வருகிறது என்றுதானே விஞ்ஞானிகளும் இப்போது விளம்புகிறார்கள் ?" ஆக, ஜூனியர் விகடனில் நான்கு வருடங்களுக்கு முன்னர் வெளிவந்த அருளாளர் யாகவா முனிவரின் நான்கு தீர்க்க தரிசனங்களும் நிறைவேறியிருக்கின்றன – அட்சரம் மாறாமல். அறியாமையால் அந்த அருளாளரைப் பற்றிக் கதைகட்டுகிற கழுதைப் புலிகள் இதற்கென்ன பதில் சொல்லப் போகிறார்கள் ?

இப்போதும் அவர் எங்களுக்குச் சொன்ன தீர்க்கதரிசனங்கள் நிறைவேறத்தான் போகின்றன. அவற்றை இப்போதைக்கு வெளிப்படுத்த வேண்டாம் என்பதல்லவா அவரது உத்தரவாக இருக்கிறது! போனதடவை யாகவர் பேசிக்கொண்டிருந்தபோது விழுந்து சிதறிய ஞான மணிகளை அள்ளிக்கொள்ளவே இயலவில்லை. இப்படிப்பட்ட ஞானமுத்துக்கள் வந்துவிழுகிற போது அவர் அவராக இல்லை. அதுதான் உண்மை.

- **விழுந்து சிதறுகிற ஞான மணிகள் !**

"வயல் வரப்பில் கலப்பை கொண்டு போகிறவன் கீழே விழுவதில்லை ; ஆனால் காவடி கொண்டு மலைமேல் போகிறவன் விழுந்து சாகிறானே !" என்றார். "உன்னைக் கொசு நோக்கும்; கொசுவைப் பிடிக்க தும்பி மறைந்து நிற்கும்; தும்பியைப் பிடிக்க ஓணான் மறைந்து நிற்கும்; ஓணானைப் பிடிக்க பாம்பு மறைந்துநிற்கும்; பாம்பைப் பிடிக்க கீரி மறைந்து நிற்கும்; கீரியைப் பிடிக்க நாய் மறைந்து நிற்கும். இப்படிப்பட்ட கலக அபாயம் நிறைந்த உலகத்தில் ஆன்மாவை மறந்தாயேடா பாவி" என்றார்.'

’கீழே விழுந்தால் அம்மா என்றுதானே கத்துகிறாய்!” என்றார் (ஆண்டவனே என்று கத்துவதில்லையே என்பது உட்பொருள்) பெற்றோரை மறக்கலாமா என்றுதான் எப்போதும் கேட்பார்.

"இந்த உலக வாழ்க்கை நீருக்குள் நீர்க்குமிழி. உன் காற்று தடுமாறிவிட்டால் ?" என்பார்

- **கற்கண்டாவது இனிக்கும் ! கற்சிலை .... ?**

கரும்பு நீரைக்கற்கண்டாக்கினான். அந்தக்கற்கண்டாவது மீண்டும் இனிப்பு நீராகி தொண்டையில் இதமாகிவிடுகிறது; கல்லைப் பிழையாக்கினானே சிற்பி; அந்தக் கல்லால் ஆன பயன் என்ன” என்று அவர் சொல்லும் போது பதினெட்டுச் சித்தர்களும் உருகிவந்து ஒரே சித்தவெளியாகி, யாகவ முனிவராகிவிட்டது போலத்தோன்றும்.

”நாலணாவிற்கு சாம்பிராணி வாங்க இயலும் ! நாலணாவிற்கு தணல் வாங்க இயலுமா ?" என்று ஒரு நாள் கேட்டார்.

அறிவாளிகளே, உங்களில் அநேகரைவிட நான் அதிகம் படித்தவன். உங்களில் அநேகர் பத்தாண்டுகளுக்கு முன்பே படிப்பதை நிறுத்திக் கொண்டவர்கள்.

நான் நேற்றும் படித்தேன்; இன்றும் படிக்கிறேன். கண்திறந்து, நான் திராட்சை எழுத்துக்களைத்தின்ன ஆரம்பித்த காலத்திலிருந்து.

- **நாலணாவிற்கு சாம்பிராணி வாங்கலாம் !**
- **நாலணாவிற்கு தணல் வாங்குவோமா ?**

"நாலணாவிற்கு சாம்பிராணி வாங்க இயலும் ! நாலணாவிற்கு தணல் வாங்க இயலுமா ?”

என்கிற ஞானத்தை யாகவர் தவிர வேறு எங்கும் பெற்றதில்லை ஞானிகள் உவமைகளால் பேசுவார்கள். உலகத்தை உய்விக்க வந்த அருளாளர் யாகவா முனிவர்.

ஒருநாள் குட்டிக்கதை ஒன்று சொன்னார். ”தேனீ ஒன்று காலையிலேயே சுறுசுறுப்பாக புறப்பட்டது. பன்றி ஒன்றும் அதிகாலையிலேயே புறப்பட்டது. இரண்டும் சந்தித்துக் கொள்கிற சந்தாப்பம் வந்தது. அப்போது பன்றி கேட்டது.

”என்ன தேனீ! காலையில் இவ்வளவு விரைவாகப் போகிறாயே ? எதற்காக ?"

அதற்குத் தேனீ சொன்னது " மனிதனுக்குத் தேவையான தேனைச் சேகரிக்கப் போகிறேன்; நீ எங்கே போகிறாய் ?"

அதற்குப் பன்றி சொன்னது, ”அவனது கழிவை உண்டு அவனுக்கே ஒரு நாள் இரையாகப் போகிறேன்" பிறகு தேனி சொன்னது:

''எனது உழைப்பைச் சுரண்டி வாழ்கிறான் மனிதன்; உன்னையே கொன்று தின்றுவிடுகிறான் மனிதன்.

- **தானியத்தால் சரீரத்திற்கு இன்பம்;**
- **தத்துவத்தால் ஆன்மாவிற்கு இன்பம் !**

நாம் இருவரும் அவனுக்காக அலைகிறோம்; திரிகிறோம். அவனுக்காக நாம் சேர்த்துவைக்கிறோம். மனிதன் நம்மை நினைப்பதும் இல்லை; நன்மை செய்வதும் இல்லை " என்றதாம்.

பிறகு ஒருநாள் முனிவர் குறிப்பிட்டார். "தானியத்தால் சரீரத்திற்கு இன்பம்; தத்துவத்தால் ஆன்மாவிற்கு இன்பம்." கதையா ? கவிதையா ? காவியமா ?

அவர் சொல்லிக் கேட்கவேண்டும்; கங்கையில் நீராடுகிற களிப்புப் பிறக்கும். சோதிடர்கள், கைரேகைக்காரர்களை அவர் சுடுவதுபோல வேறு ஒருவரும் சுடுவதில்லை.

உனக்கு ’ராஜயோகம் இக்கிறதென்று வீட்டில் இருந்துவிட்டால், ’ராஜயோகம்’ வந்துவிடுமா ? கூரையைப் பிய்த்துக் கொண்டு குதிக்கவா செய்யும் ?"

’குரங்குகளுக்கும் கைரேகை உண்டே, சோம்பேறி’ என்பார். (தொடரும்)

- **பிரதி ஞாயிறு பிற்பகல் 3 மணி முதல் மாலை 6 மணி வரை மாத்திரமே தம்மைப் பார்க்கலாம் என்பது முனிவரின் கண்டிப்பான உத்தரவு**

# 8–வது வாரம்

தணலைத் தங்கம் நேசிக்கிறதா என்பது தெரியாது. தாலி ஆகிவிட்டால் தணலில் நொந்தது தங்கத்திற்கு மறந்து போகும் என்று நாமாக நினைக்கிறோம். தங்கம் பேசுகிற பொருள் அல்ல; ஆனால் அது உருகுவதை நாம் உணர முடிகிறது. ஆனந்தக் கண்ணீர் உகுக்கிறது என்று சொல்லிவிடுவது எளிது.

ஆனால் தங்கத்திற்குத் தான் தெரிந்திருக்கும் தான்படும் வேதனை. சோதனை நெருப்பு சூழ்ந்தால் தான் தங்கம் சுத்த மாகும்; தாலியாகிச் சோபிக்கும்.

- **சோதனை நெருப்பைக் கடந்தாலொழியயாகவரை அடையமுடியாது!**

அதற்குள் தீயின் நாக்குகள் தீண்டுகிறபோது தங்கம் படுகிற பாடு இருக்கிறதே! அது என்ன வார்த்தைகளில் வடிக்கப்படத்தக்க ஒன்றா ? அப்பப்பா .....

அருளாளர் யாகவா முனிவரின் அன்பைப்பெறுவது எளிதல்ல; அதிலும் நம்மை அவர் உரைத்துப் பார்க்கிற 'உரைப்பு இருக்கிறதே அம்மம்மா.... தாங்கிக் கொள்ளவே முடியாது. ஏழு கடல் தாண்டி, ஏழேழு தீவுகள் தாண்டி, மாயக்கிழவியின் மூன்றாவது விரல் நகத்திற்குள் கூடுகட்டிக் கொண்டிருக்கும் பொன்வண்டின் இடது சிறகிற்குள்தான் அரசகுமாரனின் உயிர் இருக்கிறது என்று மாயாவிக்கதைகளில் வருமே அப்படித்தான்.

சோதனை நெருப்பைக் கடந்தாலொழிய யாகவரை அடையமுடியாது. யாகவர் மின்னலாக இறங்கிவிடுகிற மேகமழை அல்ல; பாறைகளைப் பிளந்து, ஊடுருவி உட்சென்று கண்டாகவேண்டிய காலக்கசிவு. ஆகவே தான் அநேகர் அவரை அறிந்திருக்கிறார்கள்;' சிலர்தான் அவரை உணர்ந்திருக்கிறார்கள்.

தகுதி இல்லாதவன் வேலைக்குப் போக இயலாது; தகுதி இல்லாதவன் இந்த நாட்டில் தப்பித்தவறி மேலுக்கு வந்து விட்டாலும், நீண்ட நாள் நிலைத்திருக்க இயலாது. தகுதி என்பது தர்மத்தின் அடிப்படைகளில் ஒன்று.

தாயமாடுவதற்கே தகுதி வேண்டுமென்றால் தயாபரனை அடைவதற்குத் தகுதி வேண்டாமா ?

உள்ளங்கையில் அள்ளுகிற நீர் கொஞ்சம் தான்; தாழியில் அள்ளுகிற நீர் அதிகம்தான். அதிலும் உள்ளங்கையில் ஒழுகாமலிருந்து, தாழி உடைந்திருந்தால் என்ன பண்ணுவது ?

தகுதி உடையவர்களும், சோதனை நெருப்பில் சோர்ந்து போகாமல் வெற்றி பெறுகிறவர்களுமே யாகவ முனிவரை அடைகிறார்கள். 'அவனருளால் அவன் தாள் வணங்கி' என்று ஒரு வரி உண்டு. அதுபோல் தகுதி பெறுவதற்கும், சோதனை நெருப்பில் சோர்ந்து சாம்பலாகாமல் இருப்பதற்கும் யாகவரின் அருளே வேண்டும்.

என்னவோ முற்பிறவிப் பயனாக நான் யாகவரைத் தரிசிக்க முடிந்தது. இப்போதெல்லாம் என் மனக்குறைகளைக் கூட நான் பாகவரிடத்திலே சொல்லுவது சரியா என்று சிந்தித்து வருகிறேன். சப்தமிக்கும் சமுத்திரத்திடத்திலே சென்று ஒரு நுரைப்பூவைக் கொடு என்று கோரிக்கை வைத்தால் வேடிக்கையாக இருக்காதா ?

உத்தமியான எனது மனைவி ஒரு நாள் யாகவரிடத்தில் 'எங்கள் வீட்டில் தென்னை நன்றாகக்காய்க்க வேண்டும்' என்று கேட்டுக் கொண்டாள். அவ்வாறே வளர்ப்பதற்கு யாகவரின் தோட்டத்தில் மலர்ந்து மணம் பரப்பும் ஒரு செடியின் கிளை வேண்டும் என்று அவரிடமே கேட்டாள். கற்பகத் தருவிடத்திலே நின்று கொண்டு கடலை வேண்டும் என்று – அவள் கேட்பது போலத் தோன்றியது. இருந்தாலும் என் குழந்தையின் குழந்தையான இந்தக்குணவதி அறிந்தது அவ்வளவுதான்.

- **பாரச்சுமைகளை யாகவரிடம் இறக்கி வைத்துவிட்டு பயணத்தைத் தொடரலாம்!**

"நீ அப்பத்தைக்கொடு என்று கேட்டால் உன் தகப்பன் கற்களைத் தருவானோ ?"

என்றொரு வசனம் பைபிளிலே உண்டு. 'வேண்ட முழுதும் தருவோய் நீ! வேண்டப்படுவதும் அறிவோய் நீ" என்றொரு பாடல் சைவ இலக்கியத்தில் உண்டு.

அப்படி கேளாமலே நமது மனக்குறைகளை மாற்றவல்ல அவதார மாயாவியிடத்தில், இதைத் தாருங்கள் என்று எப்படிக் கேட்பது என்றெல்லாம் இப்போது நான் நினைப்பது உண்டு.

’நன்றே செய்வாய் பிழை செய்வாய் நானோ இதற்கு நாய கமே’ என்று வரும் பாடலைப் போலத்தான் பம்பரம் போல அவரது உள்ளங்கையில் உருண்டு விளையாட நம்மை நாம் கையளித்துவிட வேண் டும்.

வாக்குறுதிகளைக் காற்றில் பறக்கவிடுகிற உலகத்தில் கடலுக்கு நடுவில் அசையாதகலங்கரை விளக்கத்தைப் போல சொன்ன சொல் தவறாத சோதியாக விளங்குகிறவர் யாகவர். விமானத்திற்குள் ஏறி இருக்கிறவன் விமான ஓட்டியின் மீது பாரத்தைப் போட்டு விட்டு பயணத்தைத் தொடர்வதைப் போல, அருளாளர் யாகவா முனிவரின் தோள்களின் மீது நமது பாரச் சுமைகளை இறக்கி வைத்து விட்டு பயணத்தைத் தொடரலாம்.

தலைநகரிலிருந்து இந்தக் கட்டுரையை எழுதுகிற நேரம், ’மக்கள் குரல் பத்திரிகை எனது இல்லத்திற்கு வந்தது. அதில் திருவாளர் தனபால் அவர்களும், திரு. அந்தோனிதாஸ் அவர்களும் தொடங்கியிருக்கிற ’ஞானப்பறவை’ என்கிற திரைப்படத்தின் தொடக்கவிழா பற்றிய செய்தி வந்திருந்தது.

யாகவரைக் குறிக்கும் ’ஞானப் பறவை’ என்கிற அவரது வாழ்க்கை வரலாறு திரைப்படமாகிற நிறைவான செய்தியால் எனது மனதிற்குள் மழை விழுந்தது.

திரைப்படத் துறையில் அரிய சாதனைகளின் ஆராதனை மண்டபமாக விளங்குகிற இயக்குனர் வியட்நாம் வீடு சுந்தரம் அவர்களின் கை வண்ணத்தில் உருவாகிற இந்தப் படத்திற்கான பாடல்களைக் கவிஞர் காமகோடியன் அவர்கள் வரைந்திருக்கிறார்கள். திரை உலகத்தின் தீபஸ்தம்பங்கள் யாகவரின் வாழ்க்கையை வெற்றிப் படமாக உருவாக்குகிற விழா நடப்பது தெரியாததால் கலந்து கொள்ள முடியாமல் போய் விட்டதே என்று கவலைப்பட்டேன்.

இருப்பினும் யாகவரைப் படமாகவும், பாடமாகவும் எப்போதும் பார்த்துக் கொண்டிருப்பதால் ஒருவாறு ஆறுதல் அடைந் தேன். இங்கு வந்தும் மூன்று நாட்களாக முயன்று ஆங்கிலம், இந்தி, மலையாளம் ஆகிய பத்திரிகை நிருபர்களையெல்லாம் வளைத்தேன்.

யாகவரின் புகழ் உலகம் முழுவதிலும் பரவவேண்டும் என்கிற பேராசையால் இரவு பகலாக எழுதி எழுதிச் சோர்ந்தேன்.

ஆளுக்கொரு வேலை என்று இங்கிருந்து யாகவரின் மகிமையை மொழிகள் தோறும் இந்த எறும்பு எடுத்துப் போகிற போது, சென்னையில் அவரது வாழ்க்கை வரலாற்றுக்கு மகத்தான திரை வடிவம் கொடுத்த வியட்நாம் வீடு சுந்தரம் என்ற பெரியாரை வரலாறு ஒரு நாளும் மறக்காது.

திரைப்படத்தின் மூலமாக யாகவ சீலரின் பெருமை இந்தியா முழுவதிலும் பரவுகிற காலத்தை உருவாக்கிய பெரியார்கள் அனைவரும் காலமெல்லாம் போற்றப்பட வேண்டியவர்கள். யாகவரின் வேடம் தாங்கி நடிகர்திலகம் நடிக்கப் போகிறார் என்று அறிந்து நான் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை.

எட்டுத்திக்கிலும் யாகவ நதி கொட்டி முழக்கப் போகிறது என்றால் இந்த நீர்த்துளிக்கு இன்பம் வராமல் இருக்குமா ?

யாவினும் நின்ற யாகவா போற்றி !<br>
ஓதாப் பொருளின் உள்ளின்ற ஒளியே போற்றி !<br>
காற்றைச் செலுத்தும் கற்பகச் சுழியே போற்றி !<br>
நீரின் நிமிர்ந்த நிறைவே போற்றி விண்மீன் விரிப்பில் வியப்பே போற்றி !<br>
ஆதியே ! அருளே !<br>
அகண்டமே போற்றி !<br>
மாயாவி நீ !<br>
மாபெரும் வாமனம் நீ !<br>
விஸ்வம் நீ !<br>
வேதம் நீ !<br>
விதைக்குள் விருட்சம் நீ !<br>
பிறைக்குள் நிலவு நீ !<br>
பரிபூரணப் பிரம்மம் நீ !<br>
நின்தாள் போற்றி !<br>
நிர்மலத்தாயே போற்றி ! போற்றி !<br>
என்று மனம் ஆனந்தக் கண்ணீர் வடிக்கிறது.

எத்தனையோ மகான்களை உலகம் கண்டது. தமிழ் நாட்டில் ரமண மகரிஷி ஆன்மஞான அருள் வெளியாக வாழ்ந்து மறைந்தார். ஆன்ம ஞானத்தை அவர் அள்ளித் தந்ததைக் காட்டிலும் பன்மடங்கு அதிகமாகவே அள்ளித் தருகிறவர் யாகவர். மேதாவிகள் எனது கருத்தை இப்போதைக்கு மறுக்கலாம். ஆனால் காலம் ஒரு நாள் அவர்களது கண்களைத் திறக்கும். வடலூர் வள்ளலாரோ, வாழையடி வாழையாக வந்த அருட்சித்தர்களோ எடுத்து சொல்லாத அளவிற்கு ஆன்ம ஞானத்தை அகலப்படுத்துகிறவர் யாகவ முனிவர்.

யாகவ குடும்பத்தின் குலவிளக்காகத் திகழுகிற திருமதி புஷ்பம் அம்மாள் 'மனைக்கு விளக்கம் மடவார்' என்கிறபடி வாழ்கிறவர்கள். இவர்களே எங்களிடம் எடுத்துக் சொன்னபடி தெய்வப் பெண்களோடு யாகவர் உரையாடுவதை, சிரித்து மகிழ்வதை இவர்கள் பலமுறை பார்த்ததுண்டாம்.

- **திரைஉலகின் வித்தகர்களால் யாகவசீலரின் பெருமை திக்கெல்லாம் பரவப் போகிறது!**
- **அருட்சித்தர்களெல்லாம் சொல்லாத அளவிற்கு ஆன்ம ஞானத்தை அகலப்படுத்துகிறவர் யாகவ முனிவர்**

யாகவர் மாயாவி என்பது முற்றிலும் உண்மை. காற்றிலேறி ககனக்கலம் செலுத்தும் யாகவர், அவரது சீடகோடிகளின் வாழ்வில் சீறுகிற புயலாவதும் உண்டு; தேகம் தழுவுகிற தென்றலாக வீசுவதும் உண்டு. புயலாக வீசுவதற்கு முன்பு என்னை மலையாக்குங்கள் என்பது எனது வேண்டுகோள். தென்றலாக வீசுவதற்கு முன் என்னை புல்லாக்குங்கள் என்பது எனது வேண்டுகோள். மழையை நான் தடுக்கமுடியாது; குடையைக் கொண்டு, போகலாம் அல்லவா? குடைக்காவது அருள் செய்வாய் குபேரா என்பது தான் என்னைப் போன்ற பக்தர்களின் வேண்டுகோள்.

என்னிடத்தில் பாத்திரம் இருக்கிறது. பிச்சைக்காக நிற்கிறேன். ரட்சிப்பாயோ? பட் சிப்பாயோ? உன் விருப்பம்! காற்றால் வியாபக விஞ்ஞானம் நடத்தும் மாயாவியே உன் பாதங்களைச் சரண் அடைந்தேன். எல்லாம் உன் பொறுப்பு. (தொடரும்)

- **பிரதி ஞாயிறு மாலை 3 மணி முதல் 6 மணிவரை மாத்திரமே தம்மைக் காணலாம் என்பது முனிவரின் கண்டிப்பான உத்தரவு.**

## 9–வது வாரம்

**யாகவா சரணம்!**

அமுத நதியாக ஓடிவருகிற யாகவரின் அன்பு மொழிகள் ஆயிரத்தில் என்க்குப் பிடித்தது எல்லாமே. எனினும் இன்று ஒரு வாசகத்தை மாத்திரமே விவரிக்கப் போகிறேன்.

'பெற்றோரைப் போற்று' என்கிற மணிவாசகத்தை அருளாளர் யாகவர் சொல்லாத நாளில்லை. இதை வெவ்வேறு வழிகளில் அவர் அழுத்தந்திருத்தமாகச் சொல்லி வருகிறார். கண்ணில் படுகிற தாய் தந்தையரைப் போற்றாதவர்கள், கண்ணில் தென்படாத கடவுளைப் போற்றுவார்கள் என்பது பொய்மைதானே என்று யாகவர் கேட்பதில் ஆழ்ந்த பொருள் உண்டு.

'மாதா, பிதா, குரு தெய்வம்' என்பார்கள். 'தந்தை தாய் பேண்' என்பார்கள். அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்' என்பார்கள். இப்படி பழமொழிகளால் நிறைந்திருக்கிற இந்த நாட்டிலே தான் வயதான தாய் தந்தையர் விழிகளில் நீரோடு வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

உறுதியாக ஒன்றைக் கடைப்பிடிக்க மாட்டோம் என்கிற முடிவிற்கு வந்த பிறகுதானே உயர்வாக அதைப் பற்றிப் பேசத் தொடங்குகிறோம்?

நமது இலக்கியங்களிலும், தேவதைக் கதைகளிலும் பெற்றோரைப் போற்ற வேண்டும் என்று பக்கம் பக்கமாக வரைந்து தள்ளிவிட்டு, நடைமுறை வாழ்க்கையில் அம்மா, அப்பாவை அழவிட்டு விடுவது நமது நாகரிகத்தின் அழுகிப்போன ஒரு அம்சம் ஆகும்.

- **அமுத நதியாக ஓடி வருகிற அன்பு மொழிகள்!**
- **கண்ணில் படுகிற தாய், தந்தையரைப் போற்றாதவன் கடவுளை வழிபடுவானா?**

"நீ பூமியில் அதிகநாள் வாழ்ந்திருக்கும்படியாக உன் தகப்பனையும், தாயையும் சங்கித்திருப்பாயாக" என்று பைபிள் சொல்லுகிறது.

”ஒரே நேரத்தில் தாயும், தந்தையும் உன்னை அழைத்தால், தாயின் குரலுக்கே முதலிடம் கொடு; காரணம், தாயின் காலடிக்குக் கீழேதான் சொர்க்கம் தொட்டில் கட்டித் தூங்குகிறது’’ என்று குறிப்பிட்டார் நபிகள் நாயகம்.

யாகவ முனிவரும் தாய்க்கே தலைமை இடமும் தனி இடமும் கொடுத்து வருகிறார். அம்மன்புரத்தில் வாழ்ந்து வரலாறான தமது தாய் இசக்கி அம்மாளை அவர் ஒருநாளும் மறந்தவர் அல்லர்.

இதைத் தான் நானும், ’அம்மன்புரம் சோலையிலே அந்தி படும் வேளையிலே இசக்கியம்மா குரல் கேட்குது – ஏலே ஏ ராசா என்று கேட்குது. இசக்கி அம்மா குரல் இன்றும் கேட்குது’ என்று ஒரு இசைப்பாடலில் எழுதினேன். யாகவரைப் பற்றிய புத்தகங்களிலே கூட அவரது தாயாரின் படமே பிரதானப் படுத்தப்பட்டு இருக்கிறது.

தாய்தான் எல்லாம். தாய் என்கிற தமிழ்ச் சொல்லை விட அம்மா என்கிற அழகான சொல் அதிக ஆழமுள்ளது. எந்தப் பெண்ணும் தாயாக இருக்கலாம். ஆனால் பெற்ற பெருமாட்டி ஒருத்தி தான் அம்மாவாக இருக்க இயலும்.

தமிழிலே கூட செவிலித்தாய், முலைத்தாய் என்கிற சொற்கள் பண்டைய இலக்கியங்களில் பரந்து கிடக்கின்றன. சகோதரனின் மனைவியும் தாயே. மாமியாருக்கும் தாய் என்கிற சொல் பொருந்தும் என்று விவேக சிந்தாமணி எடுத்துச் சொல்லுகிறது. ஆனால் அம்மா என்கிற சொல் பெற்றவள் ஒருத்திக்கே பொருந்தும். இந்தச்சொல் ’அம்ம’ (அம்ம வாழி தோழி) என்கிற சொல்லின் அடியாகப் பிறக்கிறது. ’அம்ம’ என்றால் ’கேட்பாயாக’ என்று அர்த்தம். நாம் சொல்வதை எல்லாம் கேட்கிறவள் – நமக்காகக் கேட்கிறவள் என்று அர்த்தம்.

அந்த ’அம்மா’வை வழிபட வேண்டும் என்று அழுத்தம் கொடுத்தவர்களில் தலையானவர் யாகவ முனிவர். அப்பா மறையலாம். அம்மா சாகமுடியாது என்பது எனது கருத்து. அம்மா சாகவே முடியாதா என்றால் சாகவே முடியாது என்பது எனது அழுத்தமான கருத்து. உலகத்திலிருந்து எடுத்துக் கொள்ளப்பட்ட பிறகும் பிரபஞ்ச சக்தியாக நின்று நம்மைக் காக்கிறவள் அம்மா ஒருத்திதான்.

சின்ன வயதில் ’அம்மா நெஞ்சில் உதை பார்க்கலாம்’ என்று ஆசைக்குச் சொல்லி வைப்பாள் அம்மா. பிஞ்சுக் கால்களில் அப்போதைக்கு உதைக்கத் தொடங்குகிற குழந்தை, வளர்ந்து

பெரியவனாகி அதே அம்மாவை, எந்தக்கால்களுக்கு அவள் முத்தமிட்டாளோ அந்த கால்களால் உதைப்பதைப் பார்க்கிறோம். அப்போதும் அம்மா அந்தக் குழந்தையை நினைத்தே அழுகிறாள். கொடிய வார்த்தைகளால் சுட்டெரித்தாலும், தனது குலவிளக்கு குளிர்ந்த ஒளி தரவேண்டும் என்று நினைக்கிறவள் அம்மா ஒருத்திதான். அந்த அம்மாவைப் போற்றுகிற ஞானவான்களில் தலைசிறந்தவர் யாகவமுனிவர்.

- **சொர்க்கம் தாயின் காலடியில் தொட்டில் கட்டித் தூங்குகிறது !**
- **நெஞ்சில் உதைக்கும் நேசக்கால்கள்**

ஆண்டவனைக்கூட அம்மாவிற்கு இணைவைக்க இயலாது. 'முந்தித் தவம் கிடந்து, முன்னூறு நாட் சுமந்து, அந்திபகலாய்' என்று வருகிற பட்டினத்தார் பாடல், அம்மாவின் மேன்மையை அழுத்தமாகச் சொல்லுகிறது. அம்மாவை வழிபட்டவர்களே உயர்ந்திருக்கிறார்கள் என்று நான் பலகாலமும் பேசி வந்தேன்.

பிறகு அவ்வாறு பேசுவதை விட்டுவிட்டேன். காரணம், அம்மாவை அம்மா என்பதற்காக வழிபடவேண்டும். அதை விட்டுவிட்டு வாழ்க்கையில் உயர வேண்டும் என்பதற்காக அம்மாவை வழிபட வேண்டும்.' என்று இளைஞர்கள் அர்த்தப்படுத்திக் கொண்டார்கள். ஆகவே எதிர்பார்ப்போடு செய்கிற எந்த வழிபாடும் உரிய பலனை ஒருநாளும் தராது. ஆதலால் உயரவேண்டும் என்கிற எதிர்பார்ப்போடு அம்மாவை வழிபடுகிறவர்கள் உயரப் போவதில்லை.

வயிற்று வயலில் விதையைப் பாதுகாத்துப் பயிராக்குகிற தாய் பூமியிலும் புனிதம் உடையவள். மண்ணிலிருந்து புறப்படுகிற வாழ்க்கை மண்ணுக்கே போகிறது. இந்த வாழ்க்கை வளையத்தை இணைத்து நிற்கிற இமாலய சக்தி 'அம்மா'.

மனித வாழ்க்கையில் நியாயமாக நாம் மண்ணைத்தான் தின்ன வேண்டும். 'மண்ணை அள்ளி உண்டான் உங்கள் கண்ணன் அல்லோடி' என்று பாட்டு வரும். மண்ணை அள்ளி உண்டால், உடல் ஏற்காது என்று மண்ணில் இருக்கிற சாரத்தை எல்லாம் உறிஞ்சித்தருகிற மரம் போல, அரிசிச்சோறு செரிக்காதே என்று ஆதங்கப்படுகிற அம்மாவின் மார்பில் உண்பதெல்லாம் பாலாக உருவெடுக்கிறது.

இயற்கையின் இன்பத்தொட்டிலை, அசைக்கிறவளே இந்த அம்மாதான். ஆலயங்களுக்குள்ளே கர்ப்பகிரஹம் இருக்கிறது. அதற்குத் தருகிற இடத்தை நாம் அம்மாவிற்குத் தருவதில்லை . அது அசையாத கர்ப்பக்கிரகம். இவளோ நடமாடுகிற கோயில். ஆண்டவனை உருவாக்கி வளர்க்கிற அற்புதனே இவளது கருவறையில் – உருவானவன்தானே! அம்மா என்னவாகவும் இருக்கலாம்; எப்படிப் பட்டவளாகவும் இருக்கலாம். ஆனாலும் அம்மா அம்மாதான். அந்த அம்மாவை வழிபடச் சொல்லுகிற ஒன்றிற்காகவே யாகவர் எல்லோர் நெஞ்சிலும் எப்போதும் நிலைத்திருப்பார்.

’அன்பு ஒன்று அறிவு ஒன்று உங்களின் கண்கள்; அருகிருந்து காக்கும் நானே கண்களின் இமைகள்’ என்றபடி காத்து வளர்க்கிற காமாட்சி, அம்மா. ஆகவேதான் இதிகாசங்களும், இலக்கியங்களும் அவளை ஏற்றிப் போற்றுகின்றன. இந்த வயதிலும் யாகவர் தனது அம்மாவைப் பற்றிப் பேசுகிற நேரத்தில் நெஞ்சம் நெக்குருகவே பேசுகிறார். போற்றுதலுக்குரிய அம்மாவிற்குப் புகழ் மகுடம் சூட்டுகிற யாகவரின் அம்மா உலகத்தாரின் வழிபாட்டுக்கு உரியவர்களே.

என்னைப் பெற்றவள் என்னை வளர்க்கப்பட்ட பாட்டினை நான் அறிவேன். அதைத்தான் ஒருமுறை ’தாய்’ வார இதழில் ’உங்கள் அம்மாவிற்குச் சம்பாதித்து அனுப்பினீர்களா ?’ என்று ஒருவர் கேட்ட கேள்விக்கு – ”அவளை அனுப்பி விட்டல்லவா நான் சம்பாதிக்க ஆரம்பித்தேன் !’’ என்று எழுதினேன். எல்லாம் இருந்தும் என்னிடத்தில் எனது ’அம்மா’வின் நிழற்படம் இல்லை. அம்மாவின் படம் இல்லாத மாளிகைகள் மண் குடிசைகளுக்கே சமானம்.

- **ஆண்டவனைக் கூட அம்மாவிற்கு இணை வைக்க இயலாது.**
- **யாகவர் காட்டும் அம்மா !**
- **யாகவ சமுத்திரத்தில் சங்கமம் !**

நான் ஓவியனாக இருந்திருந்தால் என் அம்மாவின் படத்தை ஓவியமாகத் தீட்டி உட்கார வைத்திருப்பேன். நான் ஓவியனும் இல்லை . என் அம்மா ஒரு ஓவியனைப்பெறவும் இல்லை . ஆகவேதான் எனது வீடு விளக்கிழந்து கிடக்கிறது. ’உன் அம்மா எப்படி இருப்பார்கள் ?’ என்று என் குழந்தைகள் கேட்டால் நான் விழிப்பேன்.

ஆகவேதான் சின்ன வயதில் அம்மாவை இழந்த நான், எனது மனைவியை அம்மாவாக வரித்துக் கொண்டேன். நாளுக்கு நாள் தெய்வக் குழந்தையாக தேறி வருகிற எனது மனைவியிடத்தில் என் அம்மா உயிரோடிருக்கிறாள் என்று இப்போது நம்புகிறேன்.

என் அம்மா என் பக்கத்திலேயே நிற்கிறாள். என்னைத் தடவிக் கொடுக்கிறாள். பாசத்தோடு என்னைப் பாதுகாக்கிறாள். 'தாய்க்காக எழுப்பப் படாததால் தாஜ்மஹால் கூட எனக்கொரு தகரக் கொட்டகையாகவே படுகிறது' என்பது எனது வரிகள்.

உலகத்தில் ஒவ்வொரு அம்மாவிற்கும் உயிர் கொடுக்கப் பிறந்த உத்தமர் யாகவர். இதுவே யாகவ சமுத்திரத்தில் நான் சங்கமமாவதற்கு முழுமுதற் காரணமானது. (தொடரும்.)

## 10–வது வாரம்

"வணங்கும் குணம் இருந்தால், உன் பெற்றோரை வணங்கு' என்று யாகவ முனிவர் எடுத்துச் சொல்லுவதைப் போலவே,"அன்பால் எதையும் சாதிப்பவன் புத்திசாலி" என்று அவர் அடிக்கடி சொல்லுவார்.

அடக்குமுறையால் பச்சை இலையைப் பழுக்க வைக்க முடியாது. அன்பால் இமயத்தைக் கூட இடம் பெயர்த்து விடலாம். உலகத்திற்கு வந்த மகான்களை இரு பிரிவுகளாகப் பிரிக்கலாம்.

சிலர் நித்தியமானவர்கள். சிலர் தற்காலிகமானவர்கள். புத்தர், இயேசு பெருமான், ராமகிருஷ்ண பரமஹம்சர், ரமண மகரிஷி போன்றவர்களை நித்தியமானர்கள் என்றும், காரல் மார்க்ஸ், லெனின், மாவோ போன்றவர்களை (இவர்களும் மகான்களே) தற்காலிகமானவர்கள் என்றும் பிரித்தார் அல்டஸ் ஹக்ஸ்லி என்ற தத்துவ ஞானி.

இந்த மகான்களில் அன்பால் உலகத்தை ஆட்கொள்ள முயன்றவர்களே நித்தியமானவர்கள். இவர்கள் தங்களை முதலில் சரிப்படுத்திக் கொண்டு பிறகு உலகத்தைத் திருத்த முன்வருகிற உத்தமர்கள்.

அன்பால் உலகத்தை ஆட்கொள்ள நினைத்தவர்களே எல்லோர் நெஞ்சிலும் இடம் பெற்றவர்கள்.

அட்டில்லாவும், செங்கிஷ்கானும் வரலாற்றில் இடம் பெற்றார்களே தவிர, அவர்களது சரித்திரம் ரத்தம் தோய்ந்த ராட்சத சரித்திரமாகவே இன்றும் கருதப்படுகிறது. ”அன்பால் எதையும் சாதிப்பவன் புத்திசாலி" என்று யாகவ முனிவர் எடுத்துச் சொல்லுவதற்கு உலக சரித்திரத்தில் உதாரணங்களுக்குப் பஞ்சமில்லை. மூளைக்கும், இதயத்திற்கும் உலகத்தில் எப்போதும் போராட்டம் நடந்து வந்திருக்கிறது.

ஐரோப்பா கண்டம் முழுவதையும் எனது குதிங்காலுக்குக் கீழே ’குவிப்பேன் என்று ஒரு காலத்தில் கொக்கரித்த நெப்போலியன் மூளைக்கு முக்கியத்துவம் தந்த மாவீரன். அவன் வாழ்ந்து வரலாறு ஆன பிரான்ஸ் நாட்டில் அவனுக்கொரு பிறந்தநாள்விழா கூட கொண்டாடப் படவில்லை . பாரீஸ் நகரத்தில் சிலையாகி நிற்கிறானே தவிர பிரெஞ்சு மக்களின் உள்ளங்களை அன்றாடம் ஆக்கிரமிக்கிறவன் நெப்போலியன் என்று சொல்லிவிட முடியாது.

இந்திய வரலாற்றில் நந்த வம்சத்தைப் பூண்டோடு அழித்து, மௌரியப் ’பேரரசிற்குக் கடைக்கால் போட்ட சாணக்கியனை அறியாதவர்கள் யார் ? மனிதனுக்கு மண்டையிலே மாத்திரம்தான் மூளை! சாணக்கியனுக்கோ உடம்பெல்லாம் மூளை என்பார்கள். அப்படிப்பட்ட சாணக்கியன் பெயரால் இந்தியாவில் ஒரு சாயாக்கடை கூட கிடையாது.

அதற்கு நேர்மாறாக, பிறவித் துன்பத்தை அறுப்பதற்காக போதிமரத்தின் கீழ் ஞானம் பெற்ற கருணை மறவர் புத்தர், கல்வாரிக் குன்றிலே, கழுமரத்திலே, வானகத்திற்கும் வையகத்திற்கும் நடுவே இழிவுச் சாவைப் பரிசாகப் பெற்றும் இரட்சணியம் கொண்டு வந்த இயேசு பெருமான் போன்றோர் இதயத்தால் வாழ்ந்தவர்கள்.

ஆகவேதான் இயேசு பெருமானின் படங்களில் இதயம் தெரிவது போல ஓவியம் அமைந்திருக்கிறதே தவிர மூளை தெரிகிற மாதிரி அமைந்திடவில்லை. ஆக, அன்பால் உலகத்தை ஆக்கிரமித்தவர்களே உலகத்தார் நெஞ்சங்களில் உயர்ந்து இருக்கிறார்கள். இதைத்தான் யாகவ முனிவர் என்கிற கருணை வடிவமான கற்பகத்தரு, ”அன்பால் எதையும் சாதிப்பவன் புத்திசாலி" என்று எடுத்துச் சொல்லுகிறது.

”நேர்மையாக இரு; நிம்மதி கண்டிப்பாக அடைவாய்" என்பது யாகவரின் பொன்மொழிகளில் ஒன்று.

நேர்மையாக இருக்கிறவனுக்கு வருகிற சோதனைகள் கொஞ்சம் அல்ல. சுற்றிச் சூழ நேர்மையை விலை பேசுகிறவர்கள் கொழுத்துத் திரிகிற உலகத்தில், வஞ்சகர்களுக்கே வாழ்க்கை அமைந்து விடுகிற உலகத்தில், பொய்யே ஆடை அலங்காரங்களோடு அன்றாடம் பவனி வருகிற உலகத்தில் நேர்மையாக இருப்பதால் என்ன பலன் என்றுதான் எண்ணத் தோன்றும். ஆனால், யாகவ முனிவர் எடுத்துச் சொல்லுகிற நேர்மைக்கு இன்றில்லா விட்டால் நாளை – நாளை இல்லாவிட்டால் நாளை மறுநாள் பலன் உண்டு என்பது கண்கூடு.

''வஞ்சம் கொள்ளாதே; பிறருக்கு உதவ நினை; நன்மை உனக்கே என்பதும் யாகவ அருளாளரின் பல்வேறு பொன் மொழிகளில் ஒன்று. இப்போதெல்லாம் எனக்கு எவர்மீதும் வஞ்சம் இல்லை . என்னை வேண்டுமென்றே அவமானப் படுத்துகிறவர்களைத் திருப்பி அவமானப்படுத்த எனக்கு. அரை நிமிடம் போதும். இருப்பினும், நான் யாகவரிடம் மாத்திரமே முறையிட்டு வருகிறேன்.

அவரது நியாயாசனத்தின் முன்பாக நீதிச் செங்கோல் நீர்த்துப் போகாது என்று நான் அறிவேன். ''பிறருக்கு உதவ நினை'' என்பது யாகவ முனிவரின் தள்ளவே முடியாத தாரக மந்திரங்களில் ஒன்று. இன்பத்தில் பங்குபெற எல்லோருமே வருகிறார்கள்.

துன்பத்தில் மனிதன் துடித்து அழுகிறபோது ஆறுதலுக்குக் கூட ஆட்கள் கிடைப்பதில்லை. வாடகை மனிதர்களை வைத்துக் கொண்டு கட்டாயக் கண்ணீருக்காக எதிர்பார்த்து நிற்கிற செயற்கை வாழ்க்கை சிதைந்து போன வாழ்க்கை நல்லவர்கள் நாட்டில் – உண்டு; அவர்கள் – வல்லவர்களாக இருப்பதில்லை.

ஆகவேதான் அநியாயம் ஆதிக்கம் – செலுத்துகிறது; அக்கிரமம் ஆலவட்டம் கேட்கிறது. இந்த இருட்டில் உதவிக்கரம் நீட்டுகிறவர்கள் உத்தமர்கள் மாத்திரமே.

யாகவர் 'உதவ நினை என்று உத்தரவிடுகிறவர் மாத்திரம் அல்ல. அவரே உதவுகிறவர். பணம் பறிக்கிற மதபீடங்களுக்கு மத்தியில் சாதி, மதங்களுக்கு அப்பால் சிலவேளை பணம் 1 கொடுத்தும் ஏழைகளுக்கு உதவுகிற பண்பாளர் எனக்குத் தெரிந்து யாகவர் ஒருவரே..

'பணத்தைச் சேர்ப்பது போல் பாவத்தைச் சேர்க்காதே' என்பதும் அவரது பொன் மொழிகளில் ஒன்று.

என்னென்ன வழிகளிலோ பணம் சேருகிறது; அதுபோல என்னென்ன வழிகளிலோ பாவம் சேருகிறது. சிந்தனையால், சொல்லால், செயலால் மனித மனத்தில் பாவம் படிந்து கொண்டே வருகிறது.

- **பொன்மொழிகளின் புனித மண்டபம்!**
- **வணங்கும் குணம் இருந்தால் பெற்றோரை வணங்கு!**
- **அன்பால் எதையும் சாதிப்பவன் புத்திசாலி!**
- **நேர்மையாக இரு; நிம்மதியைக் கண்டிப்பாக அடைவாய்!**

அநேக மதாச்சாரியார்கள் பாவத்திற்கு மன்னிப்பு உண்டென்று அறிவித்திருக்கிறார்கள். ஆனால் எனக்குத் தெரிந்து, 'மன்னிப்பு உண்டென்று மயங்காதே – பாவம் பண்ணினால் தண்டனை தப்பாதே!' என்கிற போதகம் யாகவரிடமிருந்தே அழுத்தத்தோடும், ஆழத்தோடும் புறப்படுகிறது

- **வஞ்சம் கொள்ளாதே; பிறருக்கு உதவ நினை; நன்மை உனக்கே!**
- **பணத்தைச சேர்ப்பது போல் பாவத்தைச் சேர்க்காதே!**
- **ஆசையைக் குறைத்தால் இவ்வுலகில் இன்பம் காண்பாய்!**

"ஆசையைக் குறைத்தால் இவ்வுலகில் இன்பம் காண்பாய்" என்பது யாகவ சீலரின் ஞான மொழிகளில் ஒன்று. "ஆசையே துன்பங்களுக்குக் காரணம்" என்றான் புத்த பகவான். ஆசைதான், அறுபட்டுப் போகாத ஆசைதான் இந்த உலகத்தில் மீண்டும் மீண்டும் நம்மைப் பிறக்க வைக்கிறது.

நமது பெற்றோர்களை, நமது ஊரை, இனத்தை, நிறத்தை, 'மொழியை ஆசைக்கூடுகளில் அலைமோதுகிற நமது கர்மாவே தீர்மானிக்கிறது.

என்பது புத்தசமயத்தின் ஆழ்ந்த நம்பிக்கை ஆசை அறுமின்கள் ஆசை அறுமின்கள் ஈசனோடு ஆயினும் ஆசை அறுமின்கள் – என்கிறார். திருமூலர். யாதெனின் யாதெனின் நீங்கியான் நோதல் அதனின் அதனின் இலன் என்பது திருக்குறள்.

ஆசைதான் பிறப்பிற்குக் காரணம் என்றால் அம்மா, அப்பாவின் ஆசை நமது பிறப்பிற்குக் காரணம் என்ற பொருள் கொண்டு விடக்கூடாது. நமது முற்பிறவி ஆசைகளே, நிறைவேறாத ஆசைகளே, காந்த வயலில் கருக்களாய் அலைந்து, ககனவெளியில் நம்மை மீண்டும் நடமாட விடுகின்றன.

ஆகவேதான் யாகவ முனிவர் ஆசையைக் குறைத்தால் இவ்வுலகில் இன்பம் காண்பாய்" என்கிறார்.

அலெக்சாண்டர் நாடு பிடிக்க வேண்டும் என்று ஆசைப்பட்டான்; அவனும் நினைவாகப் போனான்.

"ஏனென்ற கேள்வியை எதற்கும் கேட்பீர்; எவரிடமும் துணிவுடன் விளக்கம் கேட்பீர்" என்ற கிரேக்க ஞானி சாக்ரடீசும் கனவாகிப் போனான்.

ஆசையைத் துறக்க வேண்டும் என்று ஆசைப்பட்ட புத்தனும் மாய்ந்து போனான்.

ஆசை மனித உயிரின் சங்கிலி வளையம். மனிதனை மண்ணுடன் பிணைக்கும் மாயை. எல்லாம் ஒருநாள் அழிந்துவிடப் போகிறது. இருந்தும் வாழ்க்கை முயற்சியால் ஆனது; வாழ்க்கை உண்மைகளின் தொகுதியாக விளங்குகிறது. இந்த இருவேறு கருத்துக்களிலும் உண்மை உண்டு.

யாகவர் ஆசையை அறுத்து அப்பாலே எறிந்துவிடு என்று சொல்லவில்லை. ஆசையைக் குறை என்கிறார். இந்த நியாயமான போதகத்தில் அநேக நன்மைகள் உண்டு என்பதை வாழ்ந்து பார்த்தவர்கள் உணருவார்கள். (தொடரும்)

## 11–வது வாரம்

'பாவம் பாம்பின் விஷத்தை விடக் கொடியது' என்பது யாகவ அருளாளரின் 111 புனித மொழிகளில் ஒன்று. "கோள் சொல்லுகிறவன் சத்தம் போடாமல் கடிக்கிற பாம்பிற்குச் சமமாக இருக்கிறான்" என்கிறது கிறிஸ்தவ வேதம்.

ஆண்டாள் தனது திருப்பாவையில் 'செய்யாதன செய்யோம்; தீக்குறளைச் சென்றோதோம் என்கிறாள். சூடிக் கொடுத்த சுடர்நாச்சி இவ்வாறு அழுத்திச் சொல்லுவதற்கு அர்த்தம் உண்டு.

’செய்யாதன செய்யோம்’ என்று சொன்னதிலேயே பஞ்சமாபாதகங்களும் அடங்கிவிட்டன. அப்படி என்றால் ’தீக்குறளைச் சென்றோதோம்’ என்று அழுத்தம் கொடுத்து அறைவானேன் ?

தீக்குறள் என்பது தீமை பயக்கும் – கோள் என்று ஆகும். கோள் சொல்லுதல் பஞ்சமா பாதகங்களிலும் கொடிய பாவமாகும். ஆகவேதான், ஆண்டாள் பெருமாட்டி அதற்குத்தனி அழுத்தம் கொடுத்தாள். ’கோள்’ அரச பீடங்களின் ஆணிவேரைக் கிள்ளி எறிந்திருக்கிறது.

இன்பம் தவழும் இல்லங்களின் இடுப்பை ஒடித்திருக்கிறது. நண்பர்களை எதிரிகளாக்கி நாசப்படுத்தி இருக்கிறது. ஆகவே இதைப் படிக்கிறவர்களே, யாகவ முனிவர் அருளிச் செய்கிறபடி ”பாவம், பாம்பின் விஷத்தைவிடக் கொடியது’ என்பதை மனதில் நிறுத்துங்கள்.

எதிரியை எதிர்த்துப் போராடுகிற போது அவன் நம்மை அடிப்பதற்கும், அழிப்பதற்கும் அவனுக்குச் சந்தர்ப்பம் உண்டு. கோள் சொல்லுதல் தூங்குகிறவன் தலையில் பாறாங்கல்லைப் போடுகிற பாதகம் ஆகும். பாம்பின் விஷம் இறங்கும்; பாவத்தின் சுமை இறங்காது.

ஆகவே பாவம் செய்கிற சூழ்நிலை வருகிற போது யாகவ முனிவரை, அவரது அருள் மொழிகளை முன்னிறுத்துவது முக்காலும் நல்லது. ’வஞ்சம் கொள்ளாதே; வஞ்சத்தால் உலகில் நிம்மதி சற்றும் இல்லை . பாவம் செய்த பின் துன்பம் அடையும்போது ஐயோ, அப்பா, அம்மா என அலறாதே" என்று எச்சரிக்கிறார் யாகவர்.

- **பொன் மொழிகளின் நீராழி மண்டபம் !**

”உதவியும் உழைப்பும் நன்மை தரும். பாவமும் பழியும் கேடு தரும். செயலுக்கு முன் சிந்தனை செய். செய்துவிட்டு வருந்தாதே" என்பதும் யாகவ தவசீலரின் கட்டளை மொழிகளில் ஒன்று.

கிரகங்கள் நன்றாக இருக்கின்றன. காலமும், நேரமும் சிறப்பாக அமைந்திருக்கின்றன என்று ஒருவன் வீட்டுக்குள்ளே தன்னை பூட்டிக் கொண்டிருந்தால் என்ன நடக்கும் என்று அடிக்கடிக் கேட்பார் யாகவர்.

இதைத்தான் உதவியும், உழைப்பும் நன்மை தரும் என்கிறார் யாகவர். உதவி செய்கிறவன் தர்மத்தைச் சேர்க்கிறான். தர்மம் தலைகாக்கும் என்பதற்கு அடிப்படை வித்து உதவுவதில் இருக்கிறது. உதவிக்கு அடுத்து உழைப்பு. வியர்வை சிந்துகிற உழைப்பு. உழைப்பாலேதான் உயரலாம். உட்கார்ந்திருந்தால் நடக்காது. உழைக்கிறவர்களுக்கே ஆண்டவன் உதவுகிறான் என்பது பழமொழி. கடவுள் கதவை அடைத்தால் மனிதன் சன்னலைத்திறக்கிறான் என்கிற முதுமொழியைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

- **யாகவர் வருகிறார்; எழுந்து நில்லுங்கள் !**
- **கடந்து விடப் போகிறார் கை கூப்புங்கள் !**

''ஊருக்கு பெரியவன் என்கின்ற எண்ணம் உனக்கு வேண்டாம்; நீ உதவிக்குப் பெரியவனாக இரு" என்று அடிக்கடி அழுத்திச் சொல்லும் யாகவ அருளாளர் உழைப்பின் பெருமையையும் நாம் உணரச் சொல்லுகிறார்.'

'ஆன்மா தடுப்பது உணர்ந்தும் நம்பியவருக்கு துரோகம் செய்யாதே; செய்தால் பாவத்தின் தண்டனையை அடைந்தே தீருவாய்" என்கிற யாகவரின் அருள்மொழியின் ஆழ நீளத்தை அறிந்து கொண்டால், யாகவரின் ஞானப் பெருவெளியை, பேரின்பப் பரப்பை, பரப்பின் உள்பழுத்த ஆழத்தை ஒருவாறு அறிந்து கொள்ளலாம்.

தவறு செய்கிறபோது முதலில் செய்யாதே என்கிற குரல்தான் கேட்கிறது. இதுவே அந்தராத்மாவின் அலறல் ஆகும். இந்த அந்தராத்மாவின் அழுத்தமான சப்தத்தை அலட்சியப் படுத்திவிட்டே தவறு செய்கிறோம்.

மகாத்மா காந்தி அடிகளிலே இருந்து பல மகான்களும் இந்த அந்தராத்மா பற்றி, அதன் முனை மழுங்காத குரலொலி பற்றி அடிக்கடி எடுத்துச்சொன்னது உண்டு.

யாகவ முனிவர் தமது பழுத்த ஞானத்தால், மற்ற தவசியரும், ஞானியரும் எடுத்துச் சொல்ல முடியாத விதத்தில் 'ஆன்மா தடுப்பதை உணர்ந்தும்' என்கிறார். இதன் உட்பொருளை ஓதி உணர்ந்தால் யாகவரின் கால் நகத்தையாவது நாம் கண்டு கொண்டவர்களாவோம்.

முக்தி தரும் கனியே!
முன்வினை பனியே!
ஞானவரில் தனியே!
வாழ்வெனக்கு இனியே!
வேதங்கள் காணாத மறைமுடிவை,
தொல்பொருளை,
அடங்காத பெருவெளியை!
அட்டமாசித்திக்கும் ஆட்படா நித்தியத்தை,
வந்து ஊட்டும் வாரிதியே!
சீதளக் கதிரே – எங்கள்
சிந்தையின் அணுவே வாழி!
யாகவப் பொருளே போற்றி!
யவனராய் ஆனோம் போற்றி!

ஆன்மா தடுப்பதை நுண்ணறிவால் நோக்கி உணரும் வெற்றி நம் ஒவ்வொரு வருக்கும் வந்து வாய்க்க யாகவரே அருள் பாலிக்க வேண்டும். 'உதவி செய்' என்று சொல்லப்பட்டிருக்கலாம். 'உதவி செய்பவனைத் தடுத்தால் பிச்சை எடுத்து அலைவாய்' என்று சொன்னது யாகவர் மாத்திரமே.

உதவுவார் இல்லை என்பது ஒரு நிலை. உதவுகிறவர்களைத் தடுக்கிறார்கள் சிலர். அதற்குத் தங்களது அழுகிப் போன மூளைகளைப் பயன்படுத்துகிறார்கள் சிலர். சிலருக்கு சிரங்கு முன் கையில் இருக்கும்; சிலருக்கோ மூளையிலேயே இருக்கும். இப்படிப்பட்டவர்கள் உதவுகிறவர்களைத் தடுக்கிற மாபாதகத்தைச் செய்கிறவர்கள். உதவாதிருப்பதே குற்றம் என்றால் உதவி செய்பவனைத் தடுப்பது எண்ணிப் பார்க்க முடியாத குற்றம் அல்லவா ? இதைத்தான் யாகவர் அழுத்தந்திருத்தமாக 'உதவி செய்பவனைத் தடுத்தால் பிச்சை எடுத்து அலைவாய்' என்று உறுதியாகச் சொல்லுகிறார்.

- **நீர்ப்பறவைக்கு நீருள்ள இடம் தெரியும்;**
- **ஆன்மாவிற்கு மண்டல காண்டமார்க்கம் தெரியும்.**

உதைத்த குதிரையும், உதைத்த கழுதையும் மறக்கும். ஆனால் உதை பட்டவன் மறப்பானா? அதுபோல நீ பிறருக்கு பாவம் செய்துவிட்டு அதனை மறக்கலாம். அக்கொடுமையை அனுபவிப்பவன் மறப்பதில்லை. அதனால் தான் உங்களுக்குள் கலகம் ஏற்படுகிறது; ஒற்றுமை உண்டாவதில்லை.' கொடுமையை அனுபவிப்பவர்கள் மறப்பதில்லை என்பதை எப்போதும் அழுத்திச் சொல்லுகிறார் யாகவர். கொடுமைக் குணங்கள் கொலுவேறுகிற காரணத்தாலும், அநியாயங்களுக்கு ஆலவட்டம் சுழற்றப்படுவதாலுமே உலகத்தில் கலவரம் உருவெடுக்கிறது.

- **பரிதியும் உண்டு ;**
- **பாழ் இருளும் உண்டெனில் மாறாத தலை எழுத்தோ இது ?**
- **பாவம் பாம்பின் விஷத்தை விடக் கொடியது !**

உண்மை அறிந்தவனே !
ஓதில் அடங்காத உள்ளொளியே !
அநியாயம் செய்பவரை, அழிக்காவிட்டால்
வாழ்விற்குப் பொருளென்ன ?
வரலாற்றின் கருவென்ன ?
நியாயத்தின் சிறகுகள் நொறுங்கும்போது
பார்த்திருப்பாயோ பகலே !
பகல் வெளியே பரிதியும் உண்டு
பாழ் இருளும் உண்டெனில்
மாறாத தலை எடுத்தோ – இதை
மாற்றிட வகை இல்லையே !
யாகவா ! தவசீலா !
அநியாயக் கொம்புகளை
அழிப்பாயா ? மாட்டாயா ?
'உண்மை' அறிந்தவனே !
ஓதில் அடங்காத உள்ளொளியே !
என்றுதான் எழுதத் தோன்றுகிறது.

’நீர்ப்பறவைக்கு நீருள்ள இடம் தெரியும்; அதுபோல உன் ஆன்மாவிற்கு யாஷ்யத்தை (மண்டல காண்டம்) அடையும். வழி தெரியும்’ என்று அருளிச் செய்கிறார் ? யாகவர்.

இந்த ஆன்ம ஞானத்தை அள்ளிக் கொள்ளாமல் இருட்டில் கிடந்து இறுமாந்து, இற்று அழிகிறதே உலகம் !

ஞானிகளே, சிந்தனையாளர்களே, ஆன்ம ஞானத்தை அள்ளிக்கொள்ள இப்போதாவது யாகவரைச் சரணடையுங்கள்.

- **உதவியும் உழைப்பும் உன்னை உயர்த்தும் !**
- **ஆன்மா தடுப்பதை அறிவாயா ?**

யாகவர் வருகிறார்; எழுந்து நில்லுங்கள்; கடந்து விடப்போகிறார். கைகூப்புங்கள்! (தொடரும்)

## 12–வது வாரம்

திருமணம் ஆன அன்றைக்கே புடவையில் தீப்பிடித்து விட்டதாம். இப்படித்தான் நடக்கும்; கவலையை விடு என்று சொல்லிவிட்டாராம் யாகவர். அன்றுதான் மணப்பெண்ணுக்கு அதிர்ச்சியிலும் அதிர்ச்சி காத்திருக்கிறது. ’மனைவி மாதிரி நடந்து கொள்’ என்று உத்தரவிட்டு விட்டார் யாகவ முனிவர், புஷ்பம் அம்மாளுக்கு ஒன்றுமே புரியவில்லை. மனைவியாக வந்தவளை மனைவி மாதிரி இருந்து கொள் என்றால் எந்தப்பெண்ணுக்குத்தான் அதிர்ச்சியாய் இருக்காது ?

காலை விடிகிறது. மரத்தில் பறவைகள் கூக்குரல் கேட்கிறது. பறவைகள் பழக்கம் காரணமாக வெளிநாடுகளிலிருந்து கூட விசா இல்லாமல் திருச்செந்தூர் அம்மன்புரத்திற்கு யாகவ முனிவரின் இடத்தைத்தேடி எங்கிருந்து வருகின்றன என்றே தெரியாதாம். உயர்ந்த மரங்களோ, அடர்ந்த புதர்களோ, நீர்நிலையோ இல்லாமல் பறவைகள் எங்கிருந்து வரும் ? ஏன் வரும் ?

யாகவரின் தாயார் இசக்கி அம்மாள் விளக்குகிறார். என் மகன் மாயக்காரன்; அதிகாலை அவனை எழுப்புவதற்காகவே பறவைகள் சிறகடிக்கின்றன. மனைவி பார்க்கிறாள்.

ஒவ்வொரு நாள் காலையிலும் பறவைகள் சிறகடித்து, கூக்குரலிட்டு யாகவரை எழுப்புகின்றன. யாகவரின் முகம் பார்த்தால் அவரை வணங்கிவிட்டு, போகின்றன.

பறவைகள் யாகவரை வணங்குவதை அவரது மனைவி மாத்திரம் பார்த்தார் என்பதல்ல; பலரும் பார்த்திருக்கிறார்கள் – பறவைகள் வந்து ஒருவரை வணங்குமா ?

அதிலும் இருபதாம் நூற்றாண்டில் இப்படி ஒரு கதையா, என்று கேட்கத் தோன்றும்! இருபத்தி அய்ந்தாம் நூற்றாண்டிலும் இது தான் நிலைமை. அற்புதங்களை நம்ப மறுப்பவர்கள் எல்லாக் காலத்திலும் இருப்பார்கள். அதற்காக அற்புதங்கள் நிகழாமல் போவதில்லை. இன்றைக்கும் யாகவா முனிவரின் தலைக்குமேல் பறவைகள் வட்டமடித்து அவரை வணங்குவதை ஆயிரக்கணக்கில் மக்கள் பார்த்திருக்கிறார்கள்.

ஒரு நாள் யாகவா முனிவர் தனது மனைவியிடம் தாலியைக் கழற்றிவை என்று சொல்லிவிடுகிறார். எந்த மனைவிக்குத்தான் தாலியைக்கழற்றி வைக்க மனம் வரும் ?

எதிரிகள் அவரைப் பின்புறமிருந்து தாக்கி விடுகிறார்கள். இரத்த வெள்ளத்தில் மிதக்கிறார். தாலியைக் கழற்றி வைக்கச் சொன்னாரே என்று நினைத்த மனைவி தாலியைக் கழற்றி வைக்கிறார். போன உயிர் புது உயிராய் மீளுகிறது.

படுவூர், பட்டாபிராம், வெங்கல், பல்லாவரம், பெரும்பாக்கம் என்று பல ஊர்களில் படாதபாடுபட்டு வாழ்க்கையை நடத்திய யாகவா தம்பதிகள் இறுதியாக மேடவாக்கம் வந்திருக்கிறார்கள்.

வெங்கல் என்கிற இடத்தில் யாகவா முனிவர் வாழ்ந்த போது, கோசலா என்கிற வேலைக்காரப் பெண் சுகமில்லாமல் சாகிற தறுவாயிலிருந்திருக்கிறாள். யாகவர் தண்ணீர் கொடுத்திருக்கிறார்.

குணமாகிவிட்டது. இப்படி தண்ணீர் கொடுத்தால் குணமாகிற நிலைமை வந்ததும், ஒவ்வொரு இடத்திலும் மக்கள் கூட்டம் அவரை நெருக்க, இயலாமல்தான் இறுதியாக யாகவா முனிவர் மேடவாக்கத்திற்கு வந்திருக்கிறார். அங்கங்கே சின்னச் சின்னத் தொழில் செய்து பிழைப்பு நடத்திக் கொண்டிருந்த ஒரு குடும்பத்தை வளைத்து அற்புதம் நடக்கிறது என்று ஆயிரக்கணக்கில் மக்கள் வந்தால் என்னென்ன சங்கடங்கள் வரும் ?

எல்லாவற்றையும் தாங்கியிருக்கிறார் யாகவர். விறகு பிளந்து வேதனைப் பட்டிருக்கிறார் யாகவர். விறகு பிளந்து பிளந்து ரத்தம் வழிகிற உள்ளங்கைகளைத் தமது மனை விக்குக் காட்டுவாராம்.

இந்தப் பாடுபட வேண்டியிருக்கிறதே என்று அங்கலாய்க்கிற மனைவிக்கு காலம் மாறும்; காத்திரு என்பாராம் யாகவா முனிவர். காலம் இன்று மாறித்தான் போயிற்று. கடினமான வாழ்க்கையை மேற்கொண்டு, உழைப்பின் பெருமையை உணர்த்தி முயற்சியின் மேன்மயை வற்புறுத்தும் யாகவா முனிவரை ஆழ்ந்து பார்த்தால் வேதங்களும், இதிகாசங்களும் எடுத்துச் சொல்லுவதன் உண்மை விளங்கும்.

’தாய் தந்தையரை நிற்கவைத்து வணங்கு’ என்பார். ’நிற்கவைத்து’ என்று ஏன் சொல்லுகிறார் என்று தோன்றும். பலரும் அவர்கள் மறைந்த பிறகு பாடையில் கிடத்தி சுற்றி வருகிறார்கள். இருக்கிற போதே நிற்கவைத்து வணங்கு என்பதைத் தான் அவ்வாறு சொல்லுகிறார்.

‘கிரகத்தை, கிரஹனத்தை நம்பி வாழாதே; விதியையும், விடையையும் நம்பி வாழ்’ என்பார். ’இனம் இரண்டு; இனத்திற்குள் உள்ள காற்று ஒன்று. தர்மத்தை செய்கிறவன் மேல் சாதி; கர்மத்தைச் செய்கிறவன் கீழ் சாதி என்பார். ’கருவுற்றாள். நித்திரை கொள்வதில்லை ; உன் உடல் கண்ட பலாபலன் எதுவோ’ என்று கேட்பார். அவரைக் கேட்பதே ஒரு சுகம். (தொடரும்)

## 13–வது வாரம்

மந்திரம், மாயம் இவற்றால் எந்தப்பலனும் இல்லை என்பதை யாகவா முனிவர் எடுத்துச் சொல்லாத நாள் இல்லை. பேய், பில்லி சூனியம் என்பதெல்லாம் பித்தலாட்டம் என்பது அவரது வாக்கு. மனஉறுதி இல்லாத மக்களைத்தான் இவ்வகையான மந்திரதந்திரங்கள் பாதிக்கிறது என்பது அவரது உறுதியான கருத்து.

வஞ்சனையால் அழிப்பேன், ஒழிப்பேன் என்று வாதம் புரிகிறவர்களைப் பார்த்தால் அவருக்கு ஆகவே ஆகாது.

இப்படிப்பட்ட நீச மனிதர்களை கண்டிப்பதற்கு கொச்சையான வார்த்தைகளைக் கூட பயன்படுத்த அவர் தயங்கமாட்டார்.

பெரும்பாலான மக்களின் தவறான நம்பிக்கைக்கு ஆதரவாகத் தான் பேச வேண்டும் என்கிற எண்ணம் யாகவா முனிவருக்கு ஒருநாளும் வந்ததில்லை.

தாடி, ஜடை, முடி, காவி, கமண்டலம் இவைகளைப் போன்ற வழக்கமான வெளி வேடங்கள் இல்லாததால் பெரும்பாலான மக்கள் இவரை இதுவரை பெருமளவில் அறிந்து கொள்ளாமல் இருக்கிறார்கள். இப்பெரியாரை அறிந்து கொண்டவர்களில் குறிப்பிடத்தக்கவர் திரைப்பட இயக்குநரும், வசனகர்த்தாவுமான திரு. வியட் நாம் வீடு சுந்தரம் அவர்கள். இதோ அவரே சொல்லுகிறார். "நான் மெய் மறப்பதில்லை.

தத்துவார்த்ததோடுதான் எதையும் பார்க்கிறேன். யாகவா முனிவர் பிறந்த அம்மன் புறத்தில் பறவைகள் அவரை வந்து வணங்குவதை படம் எடுத்து வைத்திருக்கிறேன். நாம் எங்கே போகிறோம். எவரோடு பேசினோம். என்பதைக் கூட எத்தனையோ மைல்களுக்கு. அப்பாலிருக்கிற அவர் அறிந்து கொள்ளுகிறார்.

நான் அவரை கேள்விகள் மூலமாகவே அறிந்து கொள்ள ஆரம்பித்தவன். யாகவா முனிவர் கூடு விட்டு கூடு பாய்வதை நான் கண்களால் பார்த்திருக்கிறேன். அந்த உண்மையான நிகழ்ச்சியை எனது யாகவா முனிவரைப் பற்றிய ஞானப் பறவை என்கிற படத்திலும் படம் பிடித்துக் காட்டப் போகிறேன்.

மேடவாக்கத்தில் இருக்கும் பொழுதே எங்கள் வீட்டு மாடியிலும் இருக்கத்தக்கதான அற்புத அவதாரி யாகவா முனிவர் கருணையோடு அணைப்பிலும், கண்டிப்பாக திருத்துவதிலும் அவர் எனக்கு தந்தைக்கு நிகாரானவர்."

"மண்பாண்டம் அடுப்பில் ஒரு நாள் வைத்தால் கருப்பு, அதைச் செய்கிற குயவன் ஒவ்வொரு நாளும் கருப்பு" என்பார். "அடைகாக்கத் தெரியாத பறவை அக்கா, அக்கா என்கிறது." "தேள் கொட்டினால் விடுவாயா. முள் குத்தினால் விடுவாயா ?

நீ கடித்தால் நான் விடுவேனா. ? காற்றுக்குள் நான் புகுந்தால் தாங்குவாயா ?" "நீர் சுருளும், மரம் சுருளும், பறக்கவிட்ட காற்றாடி சுருளும் உடல் பட்டுப்போனால் சுருளுவதில்லை", இப்படி கிராமத்து மொழியில் கிளர்ச்சியோடு பேசுவது போல தோன்றிமானாலும் யாகவரின் தத்துவ கருத்துகளில் தனி முத்திரையே இருக்கிறது.

யாகவா முனிவர் எப்போதெல்லாம் பூகம்பம் வரும், புயல்வரும், மழைவரும் என்று அறிவித்திருக்கிறாரோ அப்போதெல்லாம் அவரது வார்த்தைகள் பொய்த்ததில்லை. அவர் நினைத்தால் இயற்கையை அடக்க முடிகிறது. ஆனால் எப்போதும் எல்லோருக்காகவும் அவர் இவற்றை செய்வதில்லை. வெளிதோற்றத்தில் ஒரு கிராமத்தானைப் போல தோன்றுகிற யாகவா முனிவர் தனக்குள் எல்லாம் மதங்களின் தத்துவங்களையும் அடக்கி வைத்திருக்கிறார்.

அவரது வெளித்தோற்றம் ஏமாறவைத்து அனைவரையும் விரட்டிவிடுகிறது. அவரது கடுமையான மொழிகள் இவர் எப்படி ஞானியாக இருப்பார் என்று சிலரை சந்தேகிக்க வைக்கிறது. இருப்பினும் பல ஞானிகள் கடந்த காலத்தில் இம்மாதிரி உன் மத்த நிலையிலேயே இருந்திருக்கிறார்கள் என்பதை நாம் அறிந்து கொள்ளவேண்டும்.

மகத்தான ஒரு மனித நதிதம் காலத்தில் நம் கண்களுக்கு முன்பாக அசைகிறபொழுது அதை நம் கண்களால் அள்ளிக் கொள்ள மறுத்தால் விழிகளைப் பெற்றது வீண்தானே ?

(அடுத்த இதழில் நிறைகிறது)

## 14–வது வாரம்

மனிதர்கள் சாகிறார்கள். மகான்கள் சமாதியாகிறார்கள். மனிதர்கள் வாழ்கிறார்கள்; மகான்கள் வாழ்விக்கிறார்கள்.

"உங்களுக்குள் ஒளி இருந்தது; அந்த ஒளி இருளிப் பிரகாசித்தது; இருந்தும் இருளானது அதை ஒப்புக் கொள்ளவில்லை ” என்று ஒருவரி பைபிளில் வரும்.

மகான்கள் நம் மத்தியில் எப்போதோ வருகிறார்கள்; நாம் கண்டு பிடிப்பதற்குள் கரைந்து போகிறார்கள்.

இதோ வருகிறார் யாகவர்; கடந்து விடப்போகிறார்; எழுந்து நில்லுங்கள் என்று மாத்திரமே எனக்குச் சொல்ல வருகிறது.

கடவுளைப்பற்றிப் பேசாததாலேயே ஒருவர் புத்தராகிவிட முடியாது. கருணை காட்டுவதாலேயே ஒருவர் இயேசுநாதராகிவிட முடியாது.

ஆனால் கடந்த காலத்தைக் கௌரவப் படுத்துவதும், நிகழ்காலத்தை நீசப்படுத்துவதுமே நமக்கு வழக்கமாகிவிட்டன.

உயிரோடிருந்தால் யானையை அவமானப்படுத்துவதும், செத்துப்போனால் பூனைக்குப் புகழ் மாலை போடுவதும், ஒரு நாகரிகத்தின் நசிவுக்கான அடையாளங்களே.

தன்னை வெளிக்காட்டாத தத்துவமாக விளங்குகிற யாகவரின் சன்னிதிக்கு மேதைகளை அழைக்கிறேன். மக்கள் ஏற்கனவே அவரைச் சந்தித்துக் கொண்டிருக்கிறார்கள்.

அவரை அறிந்து கொள்ளுவதற்கு ஒரு தகுதி வேண்டும். வளர்ச்சி இல்லாதவர்களால் இந்த ஞான விருட்சத்தைக் கண்டு கொள்ள இயலாது.

வள்ளலாரைப் பார்க்கவில்லையே என்று வருடங்கள் கடந்த பிறகு வருந்துகிற இந்தக் காலத்து இளைஞர்களைப்போல, யாகவரை அறிந்து கொள்ளாதவர்கள் சிலரேனும் ஒரு நாளில் வருந்துவார்கள்.

என்னதான் செல்வத்திலும், கெழிப்பிலும் மூழ்கிக் கிடந்தாலும், ஒரு அவதாரியின் அற்புத வெளிச்சத்தைப் புறந்தள்ளுவது இயலாது.

மாபெரும் தத்துவிகள் நம் மத்தியிலே வந்தார்கள்; வருகிறார்கள். அவர்களை உதறித்தள்ளியே சபிக்கப்பட்ட சந்ததிகளாக நாம் இல்லாதிருப்போம்.

கற்பூரத்தீபத்திலும், ஓமப்பூகையிலும் காணாமல் போகிற வேதச் சடங்குகளும், வெளி ஆசாரங்களும் விழுந்துபோகிற ஒளி முடிவாக விளங்குகிற யாகவரை ஒரு முறையேனும் பாருங்கள்.


என்னை எவரும் பார்க்க வேண்டாம்; என் சமாதியைச் சந்தித்தால் போதும் என்கிறார் அவர். ஆனால் நான் உங்களை அழைப்பதற்குக் காரணம் என்னை வியப்பிலாழ்த்திய ஒரு ஞானவானை நீங்களும் கண்களில் அள்ளிக்கொள்ள வேண்டுமென்பதே.

சொன்னது பலித்து சோபிதமான வாழ்வமைந்த பலரும் எப்படி எப்படி பக்குவமாகி வருவார்கள் என்பது, யாகவத் தத்துவம் எப்படி இறுகி வைரமாகப் போகிறது என்பதும், எதிர் காலத்திற்கு உரியவை.

உண்ட சிறப்பை உணர்த்தி சென்று பாருங்கள்; சேர்ந்து உண்ணுங்கள் என்று எடுத்துச் சொன்ன அற்றை நாள் பாணன் போல இன்று உங்களை அழைக்கிறேன்.

யாகவ வெள்ளத்தைப் பருகவாருங்கள்! நீங்கள் வராவிட்டாலும் என் அழைப்பு காற்றில்கலந்த கானமாக கற்பகோடி காலங்கள் வாழ்ந்திருக்கும்.

(நிறைகிறது.)









# மலர் :

தாவரங்கள் சிரிப்பதுண்டு – நன் மலர் மணப்பதுண்டு. மலரைப் போல் சிரிக்கின்றாய் இளமையில் நீ. மலர்களெல்லாம் பாசச் சிரிப்பு – மலரைப் போல் நீ வாழ்வது பற்று – அறிவுக்கு அழகுண்டு – அழகிற்கு அறிவுண்டோ ! – மலர் அழகாய் இருப்பதைப் பார்த்து உன் கண்கள் வட்டமிடுகின்றன – மலரின் ஞானத்தைப் பார்த்து உன் ஜீவன், ஆத்மா, பரமாத்மா வட்டமிடுகின்றன – இதுதான் ஞானத்திற்குள் ஞானம் என்று பொருள்.

| | |
|---|---|
| யாகவா முனிவர் முழுமை அடைந்த நாள் | 02-01-86 |
| அருளாளர் யாகவா அவர்கள் பிறந்த தினம் | 02-03-41 |
| அருளாளர் யாகவா அருளிச் செய்த விரத நாள் | பிரதி ஆண்டு செப். 9 |
| யாகவா வசியா திருமண நாள் | 07-10-86 |
| யாகவா முனிவர் அவர்களின் நினைவு நாள் | பிரதி ஆண்டு டிசம். 26 |

## அருளாளர் யாகவா அருளிச் செய்த விரத நாள் செப். 9

விரத நாள் அன்று காலையிலும் மாலையிலும் நீராடியபின், வேதம் படிக்கவேண்டும். வெறும் நீராகாரம் மட்டும் அருந்த வேண்டும். மாலையில் வேதம் படித்தபின் நட்சத்திரம் பார்த்த பின் பச்சரிசி உணவருந்த வேண்டும்.

வெறும் தரையில் உறங்க வேண்டும். **(வயோதிகருக்கு விதிவிக்கு)**



சத்யம் சாந்தி பிரணம்
சாந்தி சத்யம் பிரணம்
வசி வசியந்தம் வசியந்தஹா